Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 10 (18.06.2005) சனிக்கிழமை இதழ்:262

# ஹெல்கிசனின் 5 நாள் விஜயத்தில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து!

## அரசாங்க வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு—

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வந்து - இலங்கையில் தங்கியிருக்கும் 5 நாட்களுக்குள் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படும் என அரசாங்க வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

5 நாள் விஜயமாக எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ள விதார் ஹெல்கிசன், ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட அரசதரப்புத் தலைவர்களுடனும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும், முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின் மூலம் - பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடுவது (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலை!

திருகோணமலை—

திருகோணமலை - சேருநுவர அலிஓலுவ சந்தியில் - வைத்திய சாலைக்கு முன்பாக நேற்றிரவு பொலிஸ் தேசிய புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சைக்கிள் ஒன்றில் வந்த நபர்களே முத்துபண்டா (வயது 35) என்ற சார்ஜன்ட்டை சுட்டுக்கொன்றதாகவும் இவரது சடலம் சேருநுவர வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


## தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு—

தற்போது தோன்றியுள்ள அரசியல் நிலையை அடுத்து நேற்றுமுன்தினம் முதல் கொழும்பு நகரில் முப்படையினதும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினதும் மேலதிக படையணிகள் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படுள்ளன.

பொலிஸாருக்கு உதவியாக விசேட அதிரடிப்படையும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் பாதுகாப்புத் (12 ஆம் பக்கம் பார்க்க)



## பிரதேசசபையை விடவும் குறைவான அதிகாரங்களே பொதுக்கட்டமைப்புக்கு!

### பிக்குகள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளை சற்று உத்தியோகபூர்வமாக முன்னெடுத்துச் செல்வதற்கே பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பௌத்த பிக்குகளுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இந்தக் கருத்தை வெளியிட்டார். அங்கு அவர் தெடர்ந்து பேசும் போது-

இந்தக்கட்டமைப்பின் கீழ் அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக பரிந்துரை செய்வதே முக்கிய பணியாக இருக்கும். பொதுக்கட்டமைப்பானது பிரதேசசபையை விட குறைவான (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் நேற்று எதிர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம்—

பொதுக்கட்டமைப்புக்கு பௌத்த பிக்குகளும் சிங்கள இனவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்துவருவதைக் கண்டித்து நேற்று கொடிகாமம் சந்தியில் உள்ள பஸ்நிலையத்துக்கு அருகில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணிமுதல் நண்பகல் வரை இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவும் நோக்குடன் ஏற்படுத்தப்படவிருக்கும்

## திடீர் பொதுத்தேர்தல்; ஏற்பாடுகள் தீவிரம்!

கொழும்பு—

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகியதையடுத்து திடீர் பொதுத்தேர்தல் நடைபெற வாய்ப்பிருப்பதால் அதனை நடத்துவதற்கு ஏற்றவகையில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அந்த அதிகாரம் தேர்தல் ஆணை

## தளபதி கேணல் பானு மட்டக்களப்பு திரும்பினார்!



## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்கா உதவத் தயார்!

### தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்

கொழும்பு—

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கைக்காக அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் —

பொதுக்கட்டமைப்புக்கு பௌத்த பிக்குகளும் சிங்கள இனவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்துவருவதைக் கண்டித்து நேற்று கொடிகாமம் சந்தியில் உள்ள பஸ்நிலையத்துக்கு அருகில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணிமுதல் நண்பகல் வரை இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவும் நோக்குடன் ஏற்படுத்தப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பை தென்னிலங்கையிலுள்ள பௌத்த பிக்குகள் சிலரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புளொட் மீது தாக்குதல்; மூவருக்கு படுகாயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கல்லடிக் கடற்கரைக்கு மண் ஏற்றச் சென்ற புளொட் உறுப்பினர்கள் மீது நேற்றுமாலை நடத்தப்பட்ட தாக்குதலில் புளொட் உறுப்பினர்கள் இருவரும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்தனர்.

வைத்தியசாலை வீதியிலுள்ள தமது முகாமுக்கு பாதுகாப்பு அரண் அமைப்பதற்காக மண் ஏற்றச் சென்ற உழவு இயந்திரம் மீதே நேற்றுமாலை 4.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

கைக்குண்டு வீசப்பட்ட பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் இதில் புளொட் உறுப்பினர்களான சித்தன் எனப்படும் சதாசிவம் சித்திரவேல் (வயது 35), பாபா ஆகியோரும் பொலிஸ் கொன்ஸ்டபிள்களான சியம்பலகொடகமகே சுமணதிலக (வயது 36) ஆகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திடீர் பொதுத்தேர்தல்; ஏற்பாடுகள் தீவிரம்!

கொழும்பு —


அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகியதையடுத்து திடீர் பொதுத்தேர்தல் நடைபெற வாய்ப்பிருப்பதால் அதனை நடத்துவதற்கு ஏற்றவகையில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அந்த அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு மட்டுமே உள்ளது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கேற்ப மாவட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்படவேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

ஜே.வி.பி அரசிலிருந்து விலகிச்சென்ற பின் அரசுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாதுபோயிருந்தாலும் உடனடியாக அரசைத் தோற்கடிக்கும் எண்ணம் ஜே.வி.பிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ இல்லை. ஜே.வி.பியுடன் மீண்டும் இணைந்து(12 ஆம் பக்கம் பார்க்க)

# தளபதி கேணல் பானு மட்டக்களப்பு திரும்பினார்!



கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தலைமையிலான குழுவினர் நேற்று இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் மூலம் மட் டக்களப்பு சென்றனர்.

நேற்றுக்காலை முற்பகல் 8.30 மணியளவில் கிளிநொச்சி சந்திரன் மைதானத்திலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்கா உதவத் தயார்!

## தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்

கொழும்பு —

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கைக்காக அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உயர்பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக்கு பின் நாடாளுமன்றம் கலைப்பு!

## ஜனாதிபதிக்கு ஆலோசனை

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட மறுநாளே நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவரது ஆலோசகர்கள் யோசனை தெரிவித்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்படுமாகவிருந்தால், ஐ.தே.கட்சி நிச்சயம் ஆட்சியமைக்கும். இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி தனது பதவியில் தொடர்ந்திருக்க முடியும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 34 ஜே.வி.பி எம்.பிக்கள் ஆளும் கட்சி வரிசையில்!

கொழும்பு —

நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர போதிய ஆசனங்கள் இல்லாததால் ஜே.வி.பியின் 34 உறுப்பினர்கள் ஆளும்கட்சிப் பகுதியில் இருக்கும் ஆசனங்களிலேயே அமரவேண்டி ஏற்படும் என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் பிரியானி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறி நாடாளுமன்றில் சுயாதீனக் குழுவாகச் செயற்படவுள்ளதாகவும் அதனால் தங்கள் உறுப்பினர்களுக்கு எதிர்த்தரப்பில் ஆசனங்களை வழங்குமாறும் நாடாளுமன்ற பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

எதிர்க்கட்சி வரிசையில் ஜே.வி.பியின் அனைத்து உறுப்பினர்களும் அமரஆசனங்கள் இல்லாததால் அவர்களின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 34 பேர் ஆளும் கட்சி பகுதியில் இருக்கும் ஆசனங்களிலேயே அமரவேண்டி ஏற்படும் என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது ஜே.வி.பியின் 5 உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களிலும், 34 பேர் ஆளும் கட்சி பகுதி ஆசனங்களிலும் அமர்வர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1


EXPOAIR

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# கொடிகாமத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்திலிருந்து!





## ஊடகத்துறை அமைச்சு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

தகவல் மற்றும் ஊடக அமைச்சு தொலைபேசி இயக்குநர், வரவேற்பு உத்தியோகத்தர் பதவிக்கு கீழ்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

க.பொ.த. சாதாரண பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம், தமிழ் மொழி அல்லது இலக்கியம், வர்த்தகம், எண் கணிதம், தூயகணிதம், மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தரவு பதவி இயக்குநர் பதவியில் ஆறு மாதகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தொழில்சார் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரியே பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

விண்ணப்பதாரி பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை இந்த மாதம் 24 ஆம் திகதியன்றோ, அதற்கு முன்பாகவோ

செயலாளர், தகவல் ஊடக அமைச்சு, 165 பொல்ஹென் கொட, கொழும்பு 05.' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு பாடசாலையின் உள்ளக மைதானத்தில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (31)

### தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட பேராளரின் தேசிய மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். யாழ்.பல்கலைக்கழகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த 'தமிழீழ தேசியத்தின் குரல்' என்ற நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டிற்கு அனைத்து பேராளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### கும்பாபிஷேக தினம்

பண்டத்தரிப்பு சாலையடி கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நண்பகல் 1 மணிக்கு அன்னதானமும் நடைபெறவுள்ளது.

## மத்திய மருந்தகத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா

பருத்தித்துறை மத்திய மருந்தகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டும் விழா இன்று காலை 10.40 மணிக்கு மத்தியபேருந்து அமைப்புக்குழுத் தலைவர் வீ.வின்சன் டி போல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை மத்திய மருத்துவ வைத்திய அதிகாரி மங்கையர்மணி மகேந்திரா, யாழ்ப்பாண கட்டட திணைக்கள பிரதம பொறியியலாளர் குகநேசன், கட்டடத் திணைக்கள நிறைவேற்றும் பொறியியலாளர் பி.தங்கராசன், பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி க.திருச்செல்வநாயகம் ஆகியோரும்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் ச.வைத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வட மராட்சி கடற்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் அன்பழகன், வர்த்தகர் பொ.இரசதுரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வறிய மாணவர்களுக்கு உதவ சைவசமய விவகார குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது கல்வியில் போதிய ஆர்வமும், ஊக்கமும் இருந்தும் வறுமை காரணமாக கல்வியைத் தொடரமுடியாத நிலையிலுள்ள மாநகரசபை எல்லைக்குட்பட்ட 36 பாடசாலை மாணவர்களுக்கு முதற்கட்டமாக ஐநூறு ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதெனவும்

இரண்டாவது கட்டமாக ஒப்பீட்டு ரீதியில் வருமானமற்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த பின்வரும் 6 மாணவர்களுக்கு ஆகஸ்ட் 2005 முதல் இரண்டு மாதங்களுக்குஒரு தடவை ஐநூறு ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதெனவும், ஜனவரி 2006 இல் இந்த நடைமுறையை தொடர்வது அல்லது விரிவாக்குவது பற்றி மீளாய்வு செய்வதென இந்த மாதம் நடைபெற்ற நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## முச்சக்கர வண்டி சாரதி மீது துப்பாக்கி முனையில் தாக்குதல்

வடமராட்சி —


கரவெட்டி மண்டான் பகுதியில் ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில் வைத்து ஆட்டோ சாரதி ஒருவர் துப்பாக்கி முனையால் தாக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மனிப்பாய் சேச் லேனைச் சேர்ந்த தோமஸ் விக்ரம் (வயது 53) என்ற ஆட்டோச் சாரதியே தாக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் நெல்லியடி பொலிஸாரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் செல்வதற்கு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி அழைத்துச் சென்ற மூன்று பேர் அடங்கிய இளைஞர் குழுவினர் யாழ்ப்பாணம் சென்றதும் அங்கிருந்து வரணிக்குச் செல்லவேண்டும் என கூறி அழைத்துச் சென்றனர். அங்குள்ள இராணுவ முகாம் ஒன்றிற்கு சமீபமாக ஆட்டோவை நிறுத்துமாறு கோரியுள்ளனர்.

ஓட்டோ நிறுத்தப்பட்டதும் ஆட்டோவிலிருந்து இருவர் இறங்கிச் சென்றதும் மேலும் இருவர் ஆட்டோவில் ஏறினர். இதன் பின்னர் மண்டானுக்கு செல்லுமாறு கேட்டதை அடுத்து மண்டானுக்கு செல்லும்போது அங்குள்ள வெளி ஒன்றில் ஆட்டோவில் இருந்து இறங்கிவிட்டு துப்பாக்கியை காட்டி அச்சுறுத்திவிட்டு தடிகள், பொல்லுகளால் பலமாக தாக்கியதில் மயக்கமானதாகவும், பின்னர் நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் சாரதி தெரிவித்தார். இவர் நேற்று மாலை யாழ்.போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## கலையக ஊடகவள நிலையத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது!


யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றுக்கான கலையகமும் ஊடகவியல் மன்றத்துக்கான கட்டடமும் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று மாலை நடைபெற்றது.

இந்த அடிக்கல் நாட்டு விழா நேற்று மாலை யாழ் ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மேற்படி கட்டடத்துக்கான அடிக்கல்லை டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனிமைக்கற்சன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் யாழ் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையகேட்போர் கூடத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றன. யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன், துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனிமைக்கற்சன் ஆகியோரும் உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து கட்டடம் அமைக்கப்படு வதற்கான ஒப்பந்தத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனிமைக்கற்சன் ஆகியோர் ஒப்பமிட் டனர்.


மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி வெளியீடு!
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன் anniyan

இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
விசேட காட்சிகளும் உண்டு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

சிறு விளம்பரம்

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

திடகாத்திரமான 55 வதுக்குட்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:- தேசிய பாதுகாப்பு திட்டம், 181/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1953)

ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்
Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
சேதுபதி I.P.S
பஸ் போக்குவரத்துபாதை இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த
ஜித்தன்
22 ஆம் திகதி முதல் கற்கக் கசடற

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இண்டி பெண்டன்ஸ் டே
டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்
பாடசாலையூடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்
காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30

# சுனாமி பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும்

## அத்துரலிய ரத்தினதேரர் கோரிக்கை



கொழும்பு —
பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்று, ஜாதிக ஹெல உறுமய வின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான அத்துரலியே ரத்தின தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பொதுக் கட்டமைப்பு யோசனையைச் சமர்ப்பிப்பதானது -

விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்கும் ஒரு முயற்சியாகிவிடும் கோரிகதை அவ்வாறான ஒரு நடவடிக்கை மேற்கொள்வதற்குப் பதிலாக மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்துவதே சிறந்தது.

பணத்துக்காகத் தாவும் தவளைகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சரியான தீர்மானத்தை எடுக்கமாட்டார்கள்.

மக்கள் கருத்துக் கணிப்பே மக்களுடைய உண்மையான விருப்பைக் கண்டறிவதற்கான ஒரு வாய்ப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மற்றுமொரு கூட்டத்தில் உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஒமல்பே சோபித தேரர்-

பொதுக்கட்டமைப்பு யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தான் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நஷ்டஈடு வழங்க 12 கோடி ரூபா நிதி

கொழும்பு —
குவைத்தில் பணிபுரிந்து, ஈராக் படையெடுப்பால் தொழிலை இழந்து திரும்பியவர்களுக்கு நட்டஈட்டை வழங்க மேலும் 12 கோடி ரூபா கிடைத்துள்ளதாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தலைவர் பேராசிரியர் கருணாதிலக தெரிவித்துள்ளார்

குவைத் நட்ட ஈடு வழங்கப்பட்ட காலப்பகுதியில் யுத்தத்தால் விண்ணப்பிக்க முடியாமற் போன வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இந்த நட்டஈட்டுத் தொகை வழங்கப் படவுள்ளது. இதற்கமைய குவைத் போரால் தொழில்களை இழந்து, வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் உள்ள 388 பேருக்கு இந்த நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

நட்டஈடு பெற தகுதியுடையோருக்கு அடுத்த சில தினங்களில் அது குறித்து தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொளப்பட்டு வருகின்றது. (தே)

# ஜே.வி.பி அரசுடன் இணையும் வகையிலேயே எமது எதிர்கால நடவடிக்கைகள் அமையும்!

## சுசில் பிறேம ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு —
ஜே.வி.பி விரும்பினால் மீண்டும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையிலேயே தம்முடைய எதிர்கால நடவடிக்கைகள் அமைய விருப்பதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதற்கமைய அந்தக் கட்சிக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது என்பதுடன், அந்தக் கட்சி இவ்வளவு காலமும் வகித்து வந்த அமைச்சுப் பொறுப்புக ளுக்கு தங்காலிக அமைச்சர்களே நியமிக்கப்படுவர்.

ஐக்கிய மக்கள் முன்னணி உடன்படிக்கையின் பிரகாரம், கூட்டணியிலிருந்து ஒருதரப்பு -ஒரு தலைப்பட்சமாக விலகும் பட்சத்தில் அதற்கெதிராக ஒழுங்காற்று நட்வடிக்கை எடுக்கமுடியும்.

எதிர்காலத்தில் ஜே.வி.பி மீண்டும் கூட்டணி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங் கும் நோக்குடனே அந்தக் கட்சிக்கு எதிரான ஒழுங்காற்று நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கேற்றவகையில் அந்தக் கட்சியால் இவ்வளவு காலமும் வகித்துவந்த அமைச்சுப் பொறுப்புகள் - தற்காலிகமாக வேறு நபர்களிடம் ஒப்படைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் பகுதிக்கு செல்ல பொலிஸாருக்குத் தடை!

திருமலை —
விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்ல மாட்டோம் என்றும், அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்க மாட்டோம் என்றும் திருமலை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடமையாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடிதங்களைக் கையளிக்க வேண்டும் என திருமலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு பிறப் பித்துள்ளார்.

திருமலை மூதூர் பொலிஸில் கடமையாற்றிய அமல் பிரசன்ன எனும் பொலிஸ் கொன்ஸ்டபிள் உப்பாறு பிரதேசத்தில் வைத்து விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டதே இவ்வாறு அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்தும் கடிதங்களை கோருவதற்கான காரணம் என திருமலை பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி தெரிவித்தார்.

இந்த இரண்டு நிபந்தனைகள் தவிர, அனுமதியின்றி பொலிஸ் நிலையத்தை விட்டு செல்லமாட்டேன் என்றும் எழுதிக் கையெழுத் திடுமாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உறவினருடன் இருப்பதே சிறந்தது!

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கூறுகிறது

கொழும்பு —
சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் -அவர்களுடைய உற்றார், உறவினருடன் இருப்பதே சிறந்ததென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கு, விசேட இடங்களை அரசாங்கம் அமைக்க வேண் டிய தேவையில்லை.

அவர்கள் உற்றார், உறவினருடன் கிராமப் புறங்களில் வாழவைப்பதே சிறந்ததெனவும், தேசிய பாதுகாப்பு அதிகார சபையின் அமைப்பாளர் ஹிரந்தி விஜயமான கூறியுள்ளார்.

பெற்றோர்களை இழந்த சிறுவர்களைப் பாதுகாப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எதிர்கொள்ளும் பாடசாலை பிரச்சினைகள், சுகாதார மற்றும் உளரீதியான பிரச்சினைகளை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டு நிதியுதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்து, தமது அமைப்பு கண்காணித்து வருவதாகவும் ஹிரந்தி விஜயமான சுட்டிக் காட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தமானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை யின் பொறுப்புணர்ச்சியை அதிகரித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பை ஆராய்ந்த பின்னர் கருத்துத் தெரிவிக்க கோருகிறார் சந்திரிகா



கொழும்பு —
பொதுக்கட்டமைப்புக் குறித்து தீர்க்கமாக ஆராய்ந்த பின்னர் மகாசங்கத்தினர், அர சியற் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கருத்துத் தெரிவிக்க வேண்மென ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுனாமி நிவாரண சபையை அமைப் பது தொடர்பான பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். சுனாமி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தில் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத் தும், அரசியற் கட்சிகளும், விடுதலைப்புலிகளும் கலந்து கொள் வது மிகவும் முக்கியமானதாகும்.

சுனாமி நிவாரண சபை ஒரு நிர்வாக அமைப்பாகும். அந்தச் சபை ஒரு வருடத்துக்கு மாத்திரமே செயற்படும். வடக்கிலும் -கிழக்கிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டி யெடுப்புவதற்காகவே இது ஏற்படுத்தப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் கட்டுமானத் தேவைகளை இனங் கண்டு கொள்ளுதல், அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை அரசிடம் சமர்ப்பித்தல் ஆகியன இந்தச் சபையின் பணிகளாகும். சமாதான நிழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், இது ஒரு முன்னோடி செயற்திட்டமாகும்.

எனவே, இது குறித்து நிலமையை எந்த விதத்திலும் புரிந்து கொள்ளாத ஒரு சில அரசியற் கட்சிகளின் கூற்றுக்களினடிப் படையில் - தனியார் துறையைச் சேர்ந்த ஊடகங்கள், மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றன எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தவில்லை!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு —
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாம் தாக்குதல் மேற்கொள்ளவில்லையென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்கு மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொள்ளவில்லை.

பிக்கு மாணவர்கள் மீது தாக் குதல் மேற்கொண்டதாக வெளியான தகவல்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்று தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரியொருவர் பிக்கு மாணவரொருவரை குடையால் தாக்கும் போது எடுக்கப்பட்ட படமொன்று ஆங்கில ஊடகமொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாகக் கருத் துத் தெரிவித்துள்ள பொலி ஸ்மா அதிபர் - ஒரு படத்தை வைத்துக்கொண்டு, பொலிஸார் எல்லா பிக்கு மாணவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறமுடியாது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைய முற்பட்ட வேளை, அவர்களைத் தடுப்பதற்கே பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதன்போது பிரயோகிக்கப்பட்ட கண்ணீர் குண்டுத் தாக்குதலில் பல பிக்கு மாணவர்கள் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் -

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட் டிருந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமல தேரர் மீதும் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதாகக் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(01)

## கொன்பெடரேசன் கிண்ண உதைபந்தாட்டம்

# முதல் சுற்று ஆட்டங்களில் ஆஜென்ரீனா, ஜேர்மனி வெற்றி!






மியூனிச் —

ஜேர்மனியில் நடைபெறும் கொன்பெடரேசன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரில் முதல் சுற்று ஆட்டங்களில் ஆஜென்ரீனா, ஜேர்மனி அணிகள் வெற்றிபெற்றன.

ஜேர்மனி, ஆஜென்ரீனா, அவுஸ்ரேலியா, டுனிசியா, பிரேஸில், கிரீஸ், ஜப்பான், மெக்சிக்கோ ஆகிய 8 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் முதல் லீக் போட்டிகளின் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள முன்னாள் உலக சம்பியனான ஆஜென்ரீனா, டுனிசியாவை எதிர்த்து விளையாடியது.

தொடக்கத்தில் டுனிசியா வீரர்கள் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினர். இந்த அணியின் இமத் மஹட்ஹிபி ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக்கத் தவறினார்.

பின்னர் 33ஆவது நிமிடத்தில் ஆஜென்ரீன அணி பெனால்டி வாய்ப்புப் பெற்றது. இதில் ஜுவான் ரிக்யல்மி அபாரமாக கோலடித்தார். இவரைத் தொடர்ந்து 57ஆவது நிமிடத்தில் ஷேவியர் ஷவியோலா இரண்டாவது கோல் அடிக்க ஆஜென்ரீனா வலுவான முன்னிலை பெற்றது.

இதனால் ஆட்டத்தை சமனிலை செய்யும் முயற்சியில் இறங்கினர் டுனிசிய வீரர்கள். ஆனால் 72ஆவது நிமிடத்தில் ஹைகில் கியாமம்டியா அடித்த ஒரு கோல் மட்டுமே இந்த அணிக்கு ஆறுதலாக அமைந்தது. அதன் பின்பு கோல் அடிக்க முடியவில்லை.

இறுதியில் ஆஜென்ரீனா 2-1 என்ற முன்னிலையில் வெற்றி பெற்றது.

இதேவேளை பிராங்பேட்டில் புதன்கிழமை இரவு நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவை 4-3 என்ற கோல் கணக்கில் போட்டியை நடத்தும் ஜேர்மனி வெற்றி கொண்டது.

இந்த ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தது ஜேர்மனி. கெவின் குரான்யி அக்கோலை அடித்தார். அடுத்த 4ஆவது நிமிடத்தில் ஜோசிப் ஸ்கோகோ கோல் அடித்து அவுஸ்ரேலியாவை சமனிலைப்படுத்தினார்.

23ஆவது நிமிடத்தில் பெர் மெர்டசேக்கர் அடித்த கோல் மூலம் ஜேர்மனி மீண்டும் முன்னிலை பெற்றது. 31ஆவது நிமிடத்தில் ஜோன் அலாய்சி கோல் அடித்து அவுஸ்ரேலியாவை மீண்டும் சமன் பெறச் செய்தார்.

இரு அணிகளும் தலா 2 கோல்கள் போட்டிருந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

அதன் பின்னர் ஜேர்மன் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தி 2 கோல்களை அடித்து தனி முன்னிலை பெற்றனர். 60ஆவது நிமிடத்தில் மைக்கல் பேலக்கும், 88ஆவது நிமிடத்தில் லுகாஸ் பொடோல்ஸ்கியும் அடித்தனர்.

ஆட்டம் முடியும் நேரத்தில், காயம் காரணமாக வழங்கப்படும் கூடுதல் நேரத்தில் அவுஸ்ரேலிய வீரர் அலாய்சி அடித்த கோல் ஜேர்மனியின் வெற்றி வித்தியாசத்தைக் குறைக்க உதவியது.

இந்தப் போட்டிகளில் வென்றதன் மூலம் ஆஜென்ரீனா, ஜேர்மனி அணிகள் தலா 3 புள்ளிகளைப் பெற்றுள்ளன.

அடுத்து, டுனீசியாவுடன் எதிர்வரும் 18ஆம் திகதி ஜேர்மனி மோதவுள்ளது.

# பந்துவீச்சாளர்களை மிரட்டும் பத்து துடுப்பாட்ட வீரர்கள்!

லண்டன் —

எந்த துடுப்பாட்ட வீரருக்கு பந்துவீச பயப்படுவீர்கள். இப்படி ஒரு கேள்வியுடன் முன்னணி பந்துவீச்சாளர்களிடம் விஸ்டன் சஞ்சிகை கருத்துக் கணிப்பு நடத்தியது. இதில் அதிரடி வீரரான அவுஸ்ரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் பந்துவீச்சாளர்களைப் பயமுறுத்தும் துடுப்பாட்ட வீரராக அதிக வாக்குகள் பெற்றுள்ளார்.

தனது பயம் குறித்து தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் என்ரினி கூறுகையில் -

கில்கிறிஸ்ட் நம்பமுடியாத வீரர். எப்போது எப்படி விளாசுவார் என்று யாரும் கணிக்க முடியாது என்றார்.

நியூஸிலாந்து சுழற்பந்து வீச்சாளர் விற்றோரி கூறுகையில் - கில்கிறிஸ்டுக்கு பந்துவீசும்போது மட்டும்தான் கொஞ்சம் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்வேன் என்கிறார்.

இது வரை 209 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள கில்கிறிஸ்ட் 6 ஆயிரத்து 969 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 840 பவுண்டரிகளும், 94 சிக்ஸர்களும் விளாசியுள்ளார்.

இந்தப் பட்டியலில் பிறைன் லாரா இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார். அவுஸ்ரேலியாவின் முன்னணி பந்துவீச்சாளர்களான ஜிலெஸ்பி, ஷேன் வட்சன் ஆகியோர் இங்கிலாந்தின் பிளின்ரொப்பைப் பார்த்து பயப்படுவதாகக் கூறியுள்ளனர்.

பந்துவீச்சாளர்கள் பயப்படும் முதல் பத்து துடுப்பாட்ட வீரர்களின் பட்டியல் வருமாறு -

1. கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா) 2.லாறா (மேற்கிந்தியத்தீவுகள் 3. அப்ரிடி (பாகிஸ்தான்) 4. ஷேவாக் (இந்தியா) 5. பிளின்ரொப் (இங்கிலாந்து) 6. சச்சின் (இந்தியா) 7. கெய்ன்ஸ் (நியூஸிலாந்து) 8. ஹைடன் (அவுஸ்ரேலியா) 9. ரசாக் (பாகிஸ் தான்) 10. பொண்டிங் (அவுஸ்ரேலியா)

# விளையாட்டு

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்

# முதலாவது சுற்று ஆட்டங்களில் பற்றிக்ஸ், யாழ்.இந்து வெற்றி!

யாழ்ப்பாணம் —

அகில இலங்கை ரீதியில் நடைபெற்றுவருகின்ற பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ். இந்துக்கல்லூரியும் வெற்றிக்குரிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன.

கடந்த புதன்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 41.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் ஜனன்ராஜ், லூட்சன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும், ஜெனன்றன் 12, ஜக்சன் 11, பத்மமுரளி 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் சுஜன் 4, வினோசன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி தனது முதலாவது இனிங்ஸில் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதில் வினோசன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஏனைய வீரர் எவரும் இரட்டை இலக்கு ஓட்டங்களினை கூட பெறவில்லை.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் அணி வீரர் கொலின் 4, ஜீனத்ராஜ், ஜனன்ராஜ், லூட்சன் தலா இரு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடுமாறு சென்.பற்றிக்ஸ் கல்லூரி கேட்டுக்கொண்டதற்கு அமைய தொடர்ந்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி ஆட்டநேரமுடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் செந்தூரன் 21, வாகீசன் 10, ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் ஜீனத்ராஜ் 3, கொலின் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டி நிறைவுறாத பொழுதும் முதல் இனிங்ஸில் கூடுதலான ஓட்டங்களை பெற்றமைக்குரிய புள்ளிகளை சென். பற்றிக்ஸ் கல்லூரி பெற்றுக் கொண்டது.

இதேவேளை இன்னொரு முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியணியினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

17 வயதுப் பிரிவுக்கான இந்தப்போட்டியில் முதல் இனிங்ஸில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியிலும் பார்க்க யாழ்.இந்துக் கல்லூரி கூடிய ஓட்டங்களைப் பெற்று முதல் இனிங்ஸில் வெற்றிபெற்றமைக்கான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரியணி 51.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் கிஷாந் 41, நேசவர்மன், கௌதமன் ஆகியோர் தலா 24, ஜனுசன் 19 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கௌசீகன் 3, மயூரப்பிரியன், ஜாதவன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக் கல்லூரியணி 51 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று முதல் இனிங்ஸ் வெற்றிக்குரிய புள்ளியைப் பெற்றுக்கொண்டது.

இதில் நவயுகன் 78, மயூரப்பிரியன் 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் தினேஸ்குமார் 3, ஜனுசன், அக்சயன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (58)


## நட்வெஸ்ட் முக்கோண கிரிக்கெட்

# 10 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து பங்களாதேஷ் அணியை வென்றது!












ஓவல் —

நட்வெஸ்ட் முக்கோண கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை 10 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி 6 புள்ளிகளைப் பெற்றது.

ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் - இங்கிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வெற்றிகொண்ட போதும் - பங்களாதேஷ் அணியே முதலில் துடுப்பெடுத்தாடியது.

76 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய பங்களாதேஷ் அணி, பின்னர் ஒருவாறு சமாளித்து 190 ஓட்டங்களை எடுத்தது. 45.2 ஓவர்களில் 190 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணி ஆட்டமிழந்தது.

நவீட் உமர் 13, இக்பால் 19, அஷ்ரபுல் 0, இம்ரான் 10, பசார் 19, அப்ரப் அகமட் 51, காலித் மசூத் 1, ரபிக் 30, மொர்ராசா 29, மக்ஃமூத் 1, ஹுசேன் 6 ஓட்டங்களை எடுத்தனர்.


பந்துவீச்சில் ஹார்மிசன் 4, லூவிஸ் 3, கோ 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து இலகுவான இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 24.5 ஓவர்களிலேயே வெற்றி இலக்கான 192 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ட்ரெஸ்கொதிக் 76 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களுடனும், ஸ்ரரஸ் 77 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 82 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநாயகனாக ட்ரெஸ்கொதிக் தெரிவு செய்யப்பட்டார். இன்று அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

# தங்கமரம்






சிறுவர் அரங்கம்

## கிளியக்கா

கீ... கீ... என்று கத்துது
எங்கள் வீட்டுக் கிளியக்கா.
எந்தன் பேரைச் சொல்லியே
எல்லோரையும் அழைக்குது.
கீ... கீ...

வவ்... வவ்... என்று குரைக்குது
எங்கள் வீட்டு நாய்க்குட்டி.
வீட்டை, வீட்டைச் சுற்றியே
எல்லோரையும் அழைக்குது.
கீ... கீ...

அழகழகாய் அகவுது
வயலோரம் மயிலம்மா.
பெரிய தோகை விரித்தாங்கே
ஆண் மயிலும் ஆடுது.
கீ... கீ...

கன்னங்கரு குயிலம்மா
காலை நேரம் பாடுறா.
எங்கள் வீட்டுப் பக்கத்தில்
பாடிப் பாடிப் பறக்கிறா.
கீ... கீ...

*சு. சஜீவன்,*
*தரம் 10*
*இளவாலை புனித*
*ஹென்றியரசர்*
*கல்லூரி.*




## அன்புக்குரிய சிறுவர்களே!

கடந்த மூன்று மாதங்களாக சாரு அக்கா உங்களுக்கு கடிதங்கள் எழுதவில்லை. அப்படித்தானே! இனி வாராவாரம் சாரு அக்காவிடம் இருந்து கடிதங்கள் வரும். உங்களிடமிருந்தும் கடிதங்களை எதிர்பார்க்கின்றேன். சிறுவர்களே! நீங்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றால் மட்டும் காணாது. சிறு பராயத்தில் இருந்தே தன்னம்பிக்கை, விடாமுயற்சி, நல்லொழுக்கம் போன்றவற்றையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் அறிவியல் துறைக்கு உங்களின் பங்களிப்பை வழங்க வேண்டும். அந்தப் பங்களிப்பு உங்களின் தாய் நாட்டிற்கு பெருமையையும் ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் விளங்கவேண்டும்.
இதற்காகப் பல்வேறு துறை சார்ந்தவர்கள் எவ்வாறு தமது முயற்சியைக் கைவிடாது முன்னேறினார்கள், அதனால் அவர்கள் பட்ட சிரமங்கள், துன்பங்கள் போன்றவற்றைத் துருவன் ஊடாகத் தர எண்ணியுள்ளேன்.

உங்களுக்கு படித்து ஒரு ஆசிரியராக பொறியியலாளராக, மருத்துவராக, கணினி இயக்குநராக வர விருப்பம். ஆனால் ஒரு விஞ்ஞானியாக வருவதற்கு என்ன தகுதிகள் வேண்டும்? யோசியுங்கள்... பக்கம் 05 ஐ வாசியுங்கள். இதைப் பற்றி அடுத்தவாரம் பார்ப்போம்.

பாசமுடன்
சாருஅக்கா.

## ஓவியப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.



வை. அதல்யா
தரம் 4
யா/கரணவாய் மணியகாரன்.




ச.சக்திதர்ஷினி
தரம் 5
கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை.



ச.சக்திதாரணி
தரம் 1
யா/கந்தரோடை
தமிழ்க்கலவன் பாடசாலை.

## உங்கள் கைவண்ணம்




க.அபிவர்சினி
தரம் 6
யா/வட்டுக்கோட்டை
இந்துக்கல்லூரி.



# தேர்ந்தெடுத்த பொருள்

முன்னொரு காலத்தில், பர்மா நாட்டில் மிகப்பெரிய செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு மூன்று மகன்மார் இருந்தனர். அவர்கள் மூவருமே செல்வந்தரின் வியாபாரத்தில் உதவி செய்தனர்.

ஆனால் அவரோ தன்னம்பிக்கைக்குரிய வேலையாள் சொல்வதைக் கேட்டு நடந்தார். அந்த வேலையாளின் அறிவுரைப்படி நடந்ததால்தான் தன் செல்வம் மேலும் மேலும் பெருகியது என்று அவர் கருதினார். இதனால் அவர் தன் மகன்களைவிட அந்த வேலையாளுக்கு அதிக மதிப்புக்கொடுத்துக் கொண்டிருந்தார்.



செல்வந்தர் கொடுத்த மதிப்பைத் தவறாகப் புரிந்து கொண்ட வேலையாள் செல்வந்தரின் மகன்களைவிட தானே பெரியவன் என்ற இறுமாப்பில் இருந்து வந்தான்.

ஒருநாள் செல்வந்தர் கடும் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கை ஆனார். வஞ்ச கக் குணம் கொண்ட அந்த வேலையாள் தன் விருப்பம் போல அவரை உயில் எழுதச் செய்தான். நோய்வாய்ப் பட்டிருந்த செல்வந்தர் சிலநாட்களில் இறந்துவிட்டார்.

அவரின் இறப்புக்குப் பின்னர், எழுதப்பட்ட உயிலை எல்லோரும் படித்தார்கள். அதில் “இந்தச் செல்வம் முழுவதும் நானே ஈட்டியது. இதை என் விருப்பம்போல செலவுசெய்யும் உரிமை எனக்கு உள்ளது. என் மகன்கள் மூவரும் என் செல்வத்திலிருந்து, அவர்கள் விரும்பும் ஒரு பொருளை எடுத்துக்கொள்ளலாம். மீதி உள்ள என் செல்வம் அனைத்தும் என் நம்பிக்கைக்குரிய வேலையாளுக்குச் சேரவேண்டும்” என்று அந்த உயிலில் எழுதப்பட்டிருந்தது.

இந்தச் செல்வந்தர் தன் மகன்களை இப்படி ஏமாற்றிவிட்டாரே! என்று எல்லோரும் வருந்தினார்கள். இதனைப் பார்த்துக்கொண் டிருந்த வேலையாள், “உயிலின்படி உங்களுக்கு என்ன விருப்பமோ அதனை எடுத்துக்கொள்ளலாம்” என்றான்.

மூத்தமகன் “விலையுயர்ந்த இந்த மாளிகையை எடுத்துக் கொள்கிறேன்” என்றான். அந்த மாளிகை அவன் பெயருக்கு எழுதப்பட்டது. இரண்டாம் மகன் கடை தனக்கு வேண்டும் என்றான். அதன்படி அந்தக்கடை அவன் பெயருக்கு எழுதப்பட்டது.

நடப்பவை எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டி ருந்தான் அந்த வேலையாள். அந்த வேலையாளுக்குக் கிடைக்க விருக்கும், பெருஞ்செல்வத்தை எண்ணி எல்லோரும் பொறாமைப் பட்டார்கள்.

கடைசி மகனைப் பார்த்து, “உன் விருப்பம் என்ன? எந்தப் பொருள் வேண்டும்?” என்று கேட்டார்கள் பெரியவர்கள்.


“கடைசி மகன் எந்தப் பொருளைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாலும் மீதியுள்ள பொருட்கள் அனைத்தும் எனக்கே சொந் தம். இனி இந்த நாட்டில் நானே பெருஞ்செல்வன்” என்ற மகிழ்ச்சியுடன் காத்திருந்தான் அந்த வேலையாள்.


ஆனால் அறிவுக்கூர்மையுள்ள கடைசி மகன் “என் தந்தைக்கு வேலைசெய்த இவர், எனக்கும் வேலைசெய்ய வேண்டும். இவரே நான் தேர்ந்தெடுக்கும் ஒரே பொருள்” என்றான்.

அந்த வேலையாள் கடைசி மகனுக்கு வேலையாள் ஆனதால் செல்வந்தரின் எல்லாச் செல்வமும் அவனுக்கே உரியதாயிற்று. வேலையாளின் பேராசையால் அவனுக்கு எதுவுமே கிடைக்காமல் போனது.

## ஓவியம் வரைந்து பழகுவோம்

நத்தை ஒன்றை இலகுவாக வரையும் முறை காட்டப்பட்டுள்ளது வரைந்து பாருங்கள்.





# விடுகதைகளும் விடைகளும்

1. நிலத்தில் போட்டதை எடுக்கமுடியவில்லை அது என்ன?
2. தண்ணீர் காணாப்பயிர் பச்சையாக இருக்கிறது. வெற்றிலை போடாத வாய் சிவப்பாக இருக்கிறது. அது என்ன?
3. தலைமேல் முளைத்திருக்கும் கிளையில்லா மரம் அது என்ன?
4. தேவை என்றால் வீசுவோம். தேவையில்லை என்றால் எடுத்துவைப்போம். அது என்ன?
5. நடக்கமுடியாது ஆனால் நகராமல் இருக்காது. அது என்ன?
6. நாலு காலுண்டு, நடுவிலே உடலில்லை. அது என்ன?
7. நிலம் நோக்கி வரும். நுரைகக்கிச் செல்லும். அது என்ன?

## விடைகள்

1. கோலம்
2. கிளி
3. மான்கொம்பு
4. நங்கூரம்
5. கடிகாரம்
6. கட்டில்
7. கடல் அலை

## மூளைக்கு வேலை

**மூன்று சகோதரர்களும், 7 முழு மூட்டைகளும்.**


மூன்று சகோதரர்கள் அவர்களின் தாத்தாவுடன் அறுவடைக்குப் போனார்கள். தாத்தா ஒரு வயலிலும், மூன்று சகோதரர்களும் இன்னொரு வயலிலும் அறுவடை செய்தார்கள்.

தாத்தாவால் ஒரு மூட்டைதான் அறுவடை செய்ய முடிந்தது. அதை அவரே வைத்துக்கொண்டார். சகோதரர்கள் மூவரும் அறுவடையில் கிடைப்பதில் பாதியை மூத்த சகோதரனுக்கும், மீதியில் பாதியை நடுச் சகோதரனுக்கும், அதில் பாதியை கடைசிச் சகோதரனும் எடுப்பது என ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

மூன்று சகோதரர்களுக்கும் 7 மூட்டை நெல் கிடைத்தது. மூட்டைகளைப் பிரிக்காமல் முழு மூட்டைகளாக ஒப்பந்தப்படி பிரித்துக்கொள்ளப் பார்த்தனர் முடியவில்லை. தாத்தாவிடம் சென்றனர். தாத்தா தனது பங்கை இழக்காமல் மூவருக்கும் அவர்களின் ஒப்பந்தப்படி முழு மூட்டைகளாகவே பிரித்துக்கொடுத்தார். எப்படி?




மேலேயுள்ள ஆறு நாய்களையும் கவனமாகப் பாருங்கள்.
அவற்றை இனங்கண்டு கீழுள்ள படத்தில் பெயர்களை எழுதுங்கள்



## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. 18, 21

2. 21

3. மொத்தம் விளைந்த நெல் 6 மூட்டைகள். நிலச் சொந்தக்காரனுக்கு ஒரு பங்கு – 2 மூட்டைகள். குத்தகை விவசாயிக்கு 2 பங்கு – 4 மூட்டைகள். விவசாயி ஒரு நெல்மூட்டையை நிலச்சொந்தக்காரனுக்குக் கொடுத்ததும், இருவருக்கும் சமமாக மூன்று, மூன்று நெல் மூட்டைகள் கிடைத்தன.



## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் : ப.துஷாந்தினி
பாடசாலை : யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.
தரம் : 7

பெயர் : க.செல்வி
பாடசாலை : யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.
தரம் : 6
ஆர்வமுள்ள துறைகள்: கதைப்புத்தகம் வாசித்தல், முத்திரை சேகரித்தல், சிறுவர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்புதல்.

பெயர் : ஞா.தர்சன்
பாடசாலை : யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்.
தரம் : 8
ஆர்வமுள்ள துறைகள் : சித்திரம் வரைதல், கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர் : கோ.கோபாலரஞ்சினி
பாடசாலை : கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.
தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள்: நடனம் ஆடுவது, கதைப்புத்தகங்கள் வாசிப்பது, விளையாடுவது.

பெயர் : அ.ரஜிதா
பாடசாலை : கிளி/அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
தரம் : 3
ஆர்வமுள்ள துறைகள்: விளையாட்டு, படிப்பு.

பெயர் : தி.தயாபரன்
பாடசாலை : யா/கம்பர்மலை வித்தியாலயம்.
தரம் : 6
ஆர்வமுள்ள துறைகள்: விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம் விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

திகதி ............ ஒப்பம் ............

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம் ............

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஐவகை நிலங்கள்

குறிஞ்சி – மலையும் மலை சார்ந்த இடமும்.
முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்.
மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்.
நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்.
பாலை – மணலும் மணல் சார்ந்த இடமும்.

சி.நிரோஜன்
தரம் 5
யாழ்ப்பாணக் கல்லூரி.

# பறக்கும் பலூன்கள்



ஆ! நிறைய பலூன்கள். சிந்தியா சந்தோஷமாகத் துள்ளுகிறாள்.

ஆனால் அவளுக்கு எண்ணத் தெரியவில்லை. சிந்தியாவுக்கு உதவுங்கள். சிறுவர் களே!எத்தனை வகையான பலூன்கள் பறக்கின்றன. அவற்றின் எண்ணிக்கையையும்,

மொத்த பலூன்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுங்கள்.



# ரோஜர் பேக்கன்
## (Roger BACON)



ஒருவர் சொல்லும் கருத்தில் உண்மை உள்ளதா, இல்லையா என்பதை ஆய்வு மனப்பான்மையோடு பார்க்கக்கூடிய மக்கள் இன்றைக்கு இருக்கிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு சம்பவத்தையும், நிகழ்ச்சியையும் ஆய்வு மனப்பான்மையோடு, பரிசோதனை செய்து பார்க்க வேண்டும் எனக் கூறியவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. என்ன நம்ப முடியவில்லையா? தொடர்ந்து வாசியுங்கள்.

ஆராய்ச்சிகள் பல செய்து, அது சரிதானா என மீண்டும் மீண்டும் செய்து பார்த்து முடிவுகளை வெளியிடுவது அறிவியல் ஆகும். அதை மீண்டும் மற்றவர்கள் பரிசோதனை செய்து பார்த்து, அதே உண்மை கிடைத்தால்தான் அது சரியான கண்டுபிடிப்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பழங்காலத்தில் அறிஞர்கள் பலர் தங்கள் யூகத்தின் அடிப்படையில் பல கருத்துகளை வெளியிட்டனர். அவற்றைச் சோதனை செய்து பார்க்கவில்லை. அவற்றில் சில மட்டுமே உண்மை. மற்றையவை நிரூபிக்கப்படவில்லை.

தத்துவஞானி பிளேட்டோ, ஏற்கனவே சொன்ன கருத்தை ஆய்வு செய்து பார்ப்பது தவறான செயல் ஆகும் என்றார். ஆய்வு செய்து பார்ப்பது தவறானது என்ற கருத்தே அப்போது நிலவி வந்தது.

ஆனால் ரோஜர் பேக்கன் ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் என முதன் முதலாகக் கூறினார். அவரையே நாம் தற்போது "நவீன அறிவியலின் தந்தை" என அழைக்கின்றோம்.

அன்று இவர் சொன்ன கருத்துகள் இன்றைக்கு மிக மிக சாதாரண கருத்துக்கள் ஆகும். இந்த மிகச் சாதாரண கருத்தைக்கூட ஏற்காத காலமாக அன்றைக்கு இருந்திருக்கிறது என்றால், அப்போது வாழ்ந்த மக்கள் எப்படி இருந்திருப்பார்கள்?

ரோஜர் பேக்கன் ஒரு ஆங்கில தத்துவஞானியும், விஞ்ஞானியுமாவார். இவர் இங்கிலாந்தில் உள்ள இல்செஸ்டர் என்னும் இடத்தில் ஒரு வசதியான குடும்பத்தில் 1214 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய 13 ஆவது வயதில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அந்தக் காலத்தில் இந்த வயதில் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்வார்கள். அன்றைய காலத்தில் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ''தியாலஜி'' என்ற வேத சாஸ்திரமே போதிக்கப்பட்டது. இதில் குறிப்பாக கடவுள் சம்பந்தமான பாடங்களே இருந்தன.

ஆனால் பலர் கணிதம், இயற்கை விஞ்ஞானம் போன்றவற்றை மறைவாகக் கற்றனர். பேக்கன் கிரேக்க மொழி, ஹிப்ரோ, அராபிக் போன்ற மொழிகளையும், இயற்கை அறிவியல், வானவியல், பார்வை சம்பந்தமான ஒளியியல், இயந்திரவியல், இரசாயனவியல் போன்றவற்றையும் கற்றார்.

1240 இல் பாரிஸ் சென்றார். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்து, இயற்கை அறிவியல் பாடங்கள் நடத்தி வந்தார். ஓய்வு நேரங்களில் பல ஆய்வுகளைச் செய்தார். இத்தோடு சிறு சிறு அறிவியல் உரைகளையும் நிகழ்த்தினார்.

1250 ஆம் ஆண்டு இவர் தாய்நாடு திரும்பினார். பாதிரியார் உத்தரவின்பேரில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அறிவியலை மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார்.

அந்தக் காலத்தில் நிலவிவந்த மூடநம்பிக்கையை ஆய்வுசெய்து பொய் என நிரூபித்தார். அதில் ஒன்று, மக்களிடையே ஆட்டின் இரத்தத்தில் வைரம் கலந்துள்ளது என்ற கருத்து நிலவி இருந்தது. இவர் சரியான உபகரணம் கொண்டு ஆய்வுசெய்து ஆட்டு இரத்தத்தைப் பற்றி விளக்கினார்.

ஏற்கனவே இருக்கும் ஒரு கருத்துக்கு மாறாக பரிசோதனை செய்து பார்ப்பது முடியாத காலம் அது. ஆனால் இவர் தைரியமாக ஆய்வு செய்து பார்த்தார்.

ஒளியியல் சம்பந்தமான ஆய்வுகளைச் செய்து பார்த்தார். வானவில்லைப் பற்றியும், அது தோன்றுவது பற்றியும் ஆய்வு மேற்கொண்டு, வாய் நிறைய நீரை நிரப்பி, காற்றில் வேகமாக ஊதினார். ஊதிய நீர்த்துளிகளில் வானவில் தோன்றுவதைக் கொண்டு இயற்கையில் எப்படி வானவில் தோன்றுகின்றது என்பதை விளக்கினார்.

இவர் இரசாயனவியல் கற்றதால், இரசாயனவியல் பரிசோதனைகளையும் செய்துவந்தார். வெடிமருந்து சம்பந்தமான அறிவையும் பெற்றிருந்தார். 1250 ஆம் ஆண்டு நிலக்கரி, வெடியுப்பு, சல்பர் இவற்றைக்கொண்டு துப்பாக்கி மருந்தைக் கண்டுபிடித்தார்.

அரிஸ்ரோட்டிலின் கருத்துகள் மதநூல்களில் எந்தளவுக்கு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய்ந்தார். ஒருவர் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாது எனக் கூறினார். அறிவியல் என்பது மிகச் சிறிய அளவே வளர்ந்துள்ளது. கிடைக்கும் உபகரணங்களைக் கொண்டு பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். இவரின் ஆய்வுகளைப் புரிந்துகொள்ளாதவர்கள்மீதும், ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீதும் கோபங் கொண்டார். இதனால் இவருக்கு பல எதிரிகள் இருந்தனர்.

(தொடரும் ... )

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன்.
திருக்குறள்

## நமது நோக்கு

### கோலோச்சும் பௌத்த பயங்கரவாதம்

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளின் போதும் - யுத்தத்தின்போதும் ஒன்றிணைந்து செயற்பட்டு - குதூகலித்த சிங்கள அரசியல் தலைமை கள், இப்போது முரண்பட்டு முட்டிமோதிக்கொண்டிருக்கின்றன.

ஒருவருக்கொருவர் மிரட்டல் விடுப்பதும் - தமிழர் மீதான அழிவுகளுக்கு யார் காரணம் என்று ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதும் இப்போது வழக்கமாகிவிட்டது.

சிங்களத் தலைமைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த முரண்பாடுகளும் - மோதல்களும் தமிழ் மக்களுக்கு பெரும் பலத்தைச் சேர்ப்பதாகவே அமைந்திருக்கிறது.

இதுவரைகாலமும் தமிழர் தரப்பினால் உரத்துச் சொல்லப் பட்டுவந்த எத்தனையோ நியாயங்களை சர்வதேசமோ, சிங்களமக்களோ சரியாகப்புரிந்து கொள்ளவில்லை.

ஆனால், இப்போது - சிங்களத் தலைமைகளே தமிழர் தரப்பு நியாயங்களை எடுத்துச்சொல்லத் தொடங்கியிருக்கின்றன. இது இலங்கை அரசியலில் முக்கிய மாற்றமாகமட்டும் இருக்கப்போவதில்லை.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தை வலுவடையச் செய்வதாகவும் அமையப்போகிறது.

நேற்று முன்தினம் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையொன்றில் - தமிழ் மக்களுக்கு அரசாங்கம் உதவிகளை வழங்கவில்லை என்ற புலிகளின் குற்றச்சாட்டு நியாயமானதே எனத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

அரசாங்கத்தின் இந்த விரோதப்போக்கை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த தமிழ் மக்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். அதற்கெல்லாம் மசியாத சந்திரிகா ,இப்போது புலிகளின் இந்தக் குற்றச்சாட்டு நியாயமானது என்று கூறியிருந்தார்.

இது போல முன்னரும் - புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு நம்பிக்கையூட்டக்கூடிய எதையும் அரசாங்கம் செய்யவில்லை என்றும் சந்திரிகா கூறியி ருக்கின்றார்.

அதுமட்டுமன்றி யுத்தஅழிவுகளுக்கும் அரசே பொறுப்பேற்கவேண்டும் என்றும் கூட சந்திரிகா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

இப்படி தமிழ் மக்கள் எதற்காக ஆயுதப்போராட்டம் நடத்துகின்றனர் என்ற நியாயத்தை சர்வதேச சமூகத்திற்கு எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் மூலம் சொல்லியவற்றை - இப்போது சந்திரிகாவே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் நியாயத்தை - சிங்கள மக்களும், சர்வதேச சமூகமும் இவரது ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

அதேவேளை, சிங்கள அரசியல் தலைமைகள் இப்போது முட்டிமோதிக்கொள்வதாலேயே இந்த உண்மைகள் அவர்களிடமிருந்து வெளிப்படத் தொடங்கியிருக்கின்றனவே தவிர - இவர்கள் மனமுவந்து இவற்றைக் கூறவில்லை என்பதையும் தமிழ் மக்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

சிங்கள பௌத்த பேரினவாதம் தமது அதிஉச்ச கோரத்தனத்தை தமிழ் மக்கள் மீது இப்போது வெளிப்படுத்திவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கூட பகிரங்க கொலை அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு அது துணிவு பெற்றிருக்கிறது என்றால் - அதன் கோரமுகத்தை வெளிக்காட்ட வேறு உதாரணம் தேவையில்லை.

பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திட்டால் அதுவே அவரது கடைசி நிமிடமாக இருக்கு மென்றும் -


தம்பர அமிலதேரருக்கு ஏதாவது நடந்தால் சந்திரிகாவை நிம்மதியாக இருக்கவிடமாட்டோம் என்றும் கூறும் அளவிற்கு தேசிய பிக்குகள் முன்னணி இருக்கிறதெனில் - அதை பௌத்த பயங்கரவாதம் என்று கூறுவதைவிட வேறென்னபெயரில் அழைக்கமுடியும்?

இங்கே சிங்களமக்களும் - சர்வதேசமும் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். சிங்களத் தலைமைகளுக்கு இடையிலான முரண்பாடுகளால் தமிழ்மக்கள் தொடர்பாக வெளியாகும் கருத்துக்களின் நியாயங்களை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

அதன் மூலம் தமிழ் மக்கள் காலம் காலமாக எப்படி அடிமைப் படுத்தப்பட்டார்கள் என்பதை இத்தகைய கருத்துக்களில் இருந்து மதிப்பிடமுடிவதுடன் -

இலங்கையில் மிக மோசமானது சிங்கள-பௌத்த பயங்கரவாதமே என்பதையும் புரிந்து கொள்ளமுடியும்.

## நாடும் நடப்பும்



நன்றி - டெய்லி மிரார்

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# விலகத் தெரிந்தவர்கள் மீண்டும் சேரத் தெரியாதவர்களா?

ஆட்சி கவிழுமா விரைவில் பொதுத்தேர்தல் வருமா? என்று கேட்டபடி நண்பர் பரமசிவம் வந்தார்.

நேற்றும் இதே மாதிரித்தான் கேள்வி கேட்டுக் கொண்டு வந்தீர், நானும் ஏதோ பதில் சொன்னேன். இன்றும் அதே கேள்வியா என்றேன்.

இன்னும் சில வாரங்களுக்கு ஏன் சில மாதங்களுக்குக் கூட இதே கேள்விதான் கேட்டுக் கொண்டிருக்கக் கூடியதாக இருக்குமென்று நினைக்கிறேன் என்றார் பரமசிவம்.

அரசியல் நிலை அப்படித்தானிருக்கிறது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்குக் கூட கருணையே உருவான புத்த பிரானை வணங்கும் சிங்கள , பௌத்தர்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்பவர்கள் கூட விடுகிறார்களில்லை. ஊர்வலம் போனார்கள், ஆர்ப்பாட்டம் செய்தார்கள், உண்ணாவிரதமிருந்தார்கள் இப்படி எத்தனையே எதிர்ப்புக்கள் மகாநாயக தேரர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்கள் இதற்கெல்லாம் விட்டுக் கொடுக்காமல் வெளிநாடுகள் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து பொதுக் கட்டமைப்பை அமைத்தே தீருவேன் என்று சந்திரிகா அம்மையார் உறுதியாக இருந்தார் என்றேன்.

அதெல்லாம் சரிதான் பிக்குகளின் ஆர்ப்பாட்டம் உண்ணாவிரதம், மாணவர்களின் ஆர்ப்பாட்டம் எல்லாவற்றையும் எதிர்கொண்டு சமாளித்துவிட்டார். ஆளும் கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி வெளியேறி விட்டது. சந்திரிகா அம்மையார் இப்பொழுது தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கத்தவறியது பற்றியும், விடுதலைப்புலிகள் அரசின் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களில் இருக்கும் நியாயம் பற்றியெல்லாம் விபரமாக எடுத்துக் கூறுவதைக் கேட்டால் புல்லரிக்கத்தான் செய்கிறது. இவ்வளவு உண்மைகளை யும் நியாயத்தையும் எடுத்துக் கூறும் சந்திரிகா அம்மையார் 1994 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற உடனடியாகவே நேர்மையாகத் துணிச்சலுடன் நடவடிக்கை எடுத்திருந்தால் இப்பொழுது இலங்கை ஆசியாவிலேயே சொர்க்க புரியாக இருந்திருக்குமே என்று பரமசிவம் சொன்னார்.

ரணில் ஆட்சியைக் கலைப்பதற்காக ஜே.வி.பிரியுடன் சந்திரிகா அம்மையார் கூட்டுச் சேர்ந்தார். பின்னர் கூட்டாட்சியமைத்தார். ஆனாலும் இரு தரப்பும் அமைதியாக ஆழ்ந்த நட்புறவுடன் கூட்டாக வாழ்ந்ததில்லை. இப்போது பொதுக்கட்டமைப்பில் ஜே.வி.பி அம்மையாரை விட்டு வெளியேறியிருக்கிறது. இது பிரி வுதான்; மணமுறிவல்ல! இருந்தாலும் , அரசாங்கத்தைக் கவிழ்ப்பது தங்கள் நோக்கமல்ல வென்றும், ஜே.வி.பியினர் சிலர் சொல்லியிருக்கின்றனர். பொதுக்கட்டமைப்பில் ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கூறியிருக்கிறது. பொதுக் கட்டமைப்புக்கு நாங்கள் ஒத்துழைப்போம் என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பும் தெரிவித்திருக்கிறது முஸ்லிம் காங்கிரசும் ஆட்சிக் கவிழ்ப்புக்கு உதவிபுரியாது என்றேன்.

பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுபோய் அங்கீகாரம் பெறவேண்டுமென்ற கோரிக்கையை சந்திரிகா அம்மையார் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை எனவும் தமக்குரிய அதிகாரத்துடனேயே பொதுகட்டமைப்பை ஜனாதிபதி நிறைவேற்றியிருக்கலாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது. மகாநாயக்கர்களின் யோசனையை அம்மையாரால் நிராகரிக்கமுடியவில்லை. இதே சமயம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை யோசனை சொன்னமாதிரி புத்தபிக்கு கள் கட்சி பொதுக்கட்டமைப்பை சர்வஜன வாக்கெடுப்புக்குவிட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறது. பொதுக் கட்டமைப்பை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு போவதே காலங்கடத்தும் திட்டமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்குப் போனாலும், போகாவிட்டாலும் பொதுக்கட்டமைப்பு நிறைவேற்றப்படும் என்பது உறுதியாகிவிட்டது. பொதுக்கட்டமைப்பை விரைவில் நிறைவேற்றும்படி அமெரிக்கா மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

பொதுக்கட்டமைப்பு நிறைவேற்றப்பட்டபின்னர் ஜே.வி.பியும், சுதந்திரக்கட்சியும் மீண்டும் ஒன்றுசேருவதற்கான வாய்ப்பிருப்பதாகவும் சோமவன்ச சொன்னதை வைத்து அரசியல் வட்டாரங்களில் கதை பரவுகிறது. பொதுக்கட்டமைப்பைத் தொடர்ந்து அரசாங்கம் நடந்துகொள்ளும் முறையைப்பார்த்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுடன் ஒத்துழைக்க மறுக்கலாம். இதேசமயம் 2006 ஆம் ஆண்டு நவம்பரில்தான் ஜனாதிபதி தேர்தல் என்று அம்மையார் இந்தச் சமயத்தி லும் வற்புறுத்தி வருவதால், ஆட்சியைக் கவிழ்க்க ஐக்கிய தேசியக் கட்சி முனையலாம். இந்தச் சமயத்தில் ஜே.வி.பி அம்மையாருக்குக் கைகொடுக்கலாம் என்றேன்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக் கோரிக்கை மீது பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இனப்பிரச் சினைத் தீர்வுக்கு முயற்சி மேற்கொள்ளப்படலாம். பொதுக்கட்டமைப்பு இன்ப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளின் முதற்படி என்று அமெரிக்காவும் சொல்லியிருந்தது. அம் மையாரும் கூறியிருந்தார். பொதுக் கட்டமைப்புப் பிரச்சினைகளைத் தொடர்ந்து இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி யும், இதேசமயம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலும் பிரச்சினையாகலாம் என்று சொல்லியபடியே பரமசிவம் எழுந்து நடந்தார்.

என்னவாக இருந்தாலும் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யவேண்டும். இதற்கு இணங்க மறுத்தால் மாற்றித்தானேயாகவேண்டும் என்று அவர் சொல்லிப் போனார்.

## வாசகர் நோக்கு

### கண் கெட்ட பிறகேன் சூரிய நமஸ்காரம்?

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை அடாத்தாகக் கலைத்த அரசு இன்று அதே ஐ.தே.கவின் ஆதரவைக் கோரி நிற்கின்றது. 10 வருடங்களாக சர்வாதிகார ஆட்சி செய்த ஜனாதிபதி சந்திரிகா இன்று சாது நிலைக்கு வந்து மற்றவர்களுக்கு ஞானம் போதிக்கின்றார். தமிழர்களுக்கு உரிமையைக் கொடுக்க வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். என ஏதோதே கூறுகின்றார். ஆனால் இந்தச் சிந்தனை 1995 ஆம் ஆண்டில் வராதது ஏன்? தமிழ் மக்களை தமிழர்களின் புனித சின்னங்கள் சொத்துக்களை வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயுதங்களை வைத்து சமாதானத்திற்கான யுத்தம் என வெளிநாடுகளையும் நம்பவைத்து அழித்தார். அவற்றை யெல்லாம் பார்த்துக் கொண் டு வெளிநாடுகள் மௌனமாக இருந்தன.

புலிகள் பயங்கரவாதிகள் என்று கூடச் சொன்னார்கள். இதன் அடுத்த கட்டத்தில் புலிகளின் புதிய பரிமாணத்தையும் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பார்த்த வெளிநாடுகள் தமது எண்ணங்களைக் கைவிட்டனர். இந்த நிலையில் தான் இனித் தமிழர்களை யுத்தத்தில் வெல்ல முடியாது சமாதானமாகப் போங்கள் என அறிவுரை கூறி உதவியும்செய்யத் தொடங்கினர். இந்த நிலையில் தான் இலங்கை அரசும் உண்மையைப் புரிந்து கொண்டது. இதன் காரணமாத்தான் சமாதான நாட்டமுள்ளவர்களாக தங்களைக் காட்டிக் கொள்கின்றது. எப்படியாயினும் தமிழர்கள் நடந்து முடிந்தவற்றை மறைக்கவும், மறக்கவும் தயாராக இல்லை. இது ஆறாத ரணங்களாக இருக்கும். இந்தச் சுனாமிப் பொதுக்கட்டமைப்பும் கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் போன்றதாகவே இருக்கும்.

வடமராட்சி — ஆர் .என். கோபால்

- கலையியல்-

- கனடா - தா.விவேகானந்தன் -

# உள்ளக் காயங்கள் ஊமையாகிவிடுவதில்லை அது என்றோ ஒருநாள் வெளிப்பட்டே தீரும்!

**"பியானோ கலைஞன்" (The Pianist)**
**மொழி - ஆங்கிலம்/ ஜேர்மனி/ ருஷ்யன்**
**இயக்குநர் - ரோமன் போலன்ஸ்கி**

**The Pianist :** *பியானோ கலைஞன்.*

மனிதகுல வரலாற்றில் நிகழ்ந்தேறிய ஈனத்தனமான பதிவுகளில் ஒன்று நாற்பதுகளில் இடம்பெற்ற யூத இன அழிப்பு. இரண்டாம் உலகப்போர் மூள்வதற்கு மூலகாரணமாகிய ஹிட்லரின் நாடு பிடிப்பு போலந்தில் தொடங்கி ரஷ்யா - பிரான்ஸ் என நீண்டு சென்றது. இத்தாலியின் முசோலினி அரசுடனும், கீழைத்தேசத்தில் ஜப்பானிய வல்லாதிக்க அரசுடனும் ஜேர்மனி கூட்டிணைந்தது. மானுட நெறிமுறைகளைப் புறந்தள்ளி எல்லைகளை எல்லாம் வெறி நடை போட்டுக் கடந்தது. அதன் காலடியில் மனிதம் மிதிபடலானது. யூத இனத்தை ஏரியூட்டியது. ஆனால் இரண்டாம் உலகப் போர் முடிவுறச் சற்றுமுன்பாகவே ஹிட்லரும், முசோலினியும் வரலாற்றுப் பக்கங்களிலிருந்து துடைத்தெறியப்பட்டனர். ஜப்பான் அணுகுண்டின் அழிவுகளால் உறைந்து போய் நின்றது.

வரலாறு தன்னை மீளவும் படைக்கிறது(**History repeats - itself**) என்ற வாசகம் மனதில் எழுகிறது.

இதனைப் பின்புலமாகக் கொண்டு 2002 இல் வெளிவந்த **The pianist** என்ற திரைப் படத்தை நோக்குவோம்.

ஹிட்லர் கால போலந்தின் யூதமக்கள் சந்தித்த அவலங்களைக் கருவாக்கி வார்க்கப்பட்ட ஓர் துன்பியல் நிறைந்த கவிதை **The pianist.** இது போலந்தின் வரலாற்றில் துயர் நிறைந்த அத்தியாயம் ஒன்றின் பக்கங்களாக திரையில் விரிகிறது. இந்தப் படத்துக்குள் நுழையும் முன்பாக படம் நிகழும் கால வரலாற்றுப் பின்னணியின் பிழிவு இதோ.

*1939* ஆம் ஆண்டு புரட்டாதி 1 ஆம் நாள் இரண்டாம் உலகப்போர் வெடிக்கிறது. போலந்தின் வார்சோ நகர் ஜேர்மனியின் முதலாவது இலக்காகிறது. முதல் நாள் இரவு முதல் நாள் முழுவதும் லுஃப்ட்வாஃப் (**Luftwaffe**) எனும் நாஸி விமானப்படை குண்டுகளால் வார்சோவைக் தாக்குகிறது. அடுத்த நாள் தரைமுற்றுகை தொடங்குகிறது. வார்சோ மக்கள் துணிச்சலுடன் முற்றுகையை எதிர்கொண்ட போதும் - மின்சாரத் துண்டிப்பு, குடிநீர் விநியோகத் துண்டிப்பு, உணவுப்பற்றாக் குறை என்பவற்றால் புரட்டாதி *27* இல் நாஸிப்படைகளிடம் சரணடைய நேரிடுகிறது. நாஸிப் படைகள் ஐப்பசி முதலாம் நாள் வார்சோவினுள் நுழைகின்றன.

போலந்தில் அப்போதிருந்த *3.5* மில்லியன் யூதர்களில் *360* ஆயிரம் யூதர்கள் வார்சோவிலேயே இருந்தார்கள்.

வார்சோவின் மொத்தக் குடித்தொகையில் அது மூன்றிலொரு பங்கு. வார்சோவின் நாஸி இயந்திரம் யூதமக்களைக் குறிவைத்து அடக்குமுறைகளை ஆரம்பித்தது. கெஸ்த்தாப்போ (**Gestapo**) என்ற நாஸிப்படையணியும், எஸ்.எஸ்.பொலிஸ் என்ற காவற்படையும் இந்தத் தாக்குதலை தொடங்கின. இவை யூத மக்களை பட்டினி போட்டன. குடும்பங்களை தனிமைப்படுத்தின. சொத்துக்களை கைப்பற்றின. பணங்களைப் பறிமுதல் செய்தன. எழுந்தமானமாக மக்களைச் சுட்டுத்தள்ளின. இந்த நடவடிக்கைகளுக்கு இறுதித்தீர்வு என்று நாஸிகள் பெயரிட்டிருந்தனர்.

மார்கழி 1 ஆம் நாள் 39 யூதர்கள் தங்கள் கைகளில் வெண்ணிறப்பின்னணியில் நீல நிறத்தில் தாவீதின் நட்சத்திரம் (யூதர்களின் புனிதச்சின்னம்) பொறித்த கைப்பட்டி அணிய வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. யூதர்கள் கூலிவேலைகளுக்கென ஒதுக்கப்பட்டனர். அவர்கள் பொது வாகனங்களில் பயணித்தலோ, பூங்காக்களில் நடமாடுதலோ, அங்குள்ள இருக்கைகளில் அமர்தலோ, நடைபாதையோரங்களில் நடத்தலோ தடை செய்யப்பட்டது.

*கார்த்திகை 15ஆம் திகதி 1940 ஆம்* ஆண்டு வேறு இடங்களில் இருந்தும் கொண்டுவரப்பட்ட யூதர்களின் வரவால் வார்சோவில் யூதர்களின் எண்ணிக்கை *500* ஆயிரம் ஆக அதிகரித்தது. வார்சோவின் கிறகோவ் (**Kra cow**) என்ற சிறிய வட்டாரம் ஒன்றினுள் யூதர்கள் ஒதுக்கப்பட்டனர். அதில் யூத வட்டாரம் எனப் பிரகடனப் படுத்தப்பட்டது. ஏனைய பகுதிகளிலிருந்து அது தனிமைப் படுத்தப்பட்டு, சுற்றிவர சுவர் எழுப்பப்பட்டது. இந்தச் சுவர்களுக்குள்ளாக பட்டினியும், தொற்று நோய்களும் படுகொலைகளும் அந்த மக்களைப் பலியெடுக்க 1 லட்சம் யூதர்கள் இறந்து போயினர். எனினும் எல்லாவற்றையும் மீறி அந்த மக்கள் இயல்பு நிலையைப் பேணிவந்தனர். பாடசாலைகள் இயங்கின. கலை பண்பாட்டு செயற்பாடுகளும், அரசியல் நடவடிக்கைகளும் தொடர்ந்தன.

ஆடி மாதம் *1942* ஆம் ஆண்டு யூதர்களை வதை முகாங்களுக்கு ஏற்றுமதி செய்யும் கொடுமை தொடங்கிற்று.

*310* ஆயிரம் யூதர்கள் மாடுகள் ஏற்றப்படும் பெட்டிகளில் அடைக்கப்பட்டு ரயில்களில் ற்றெபிளிங்கா (**Treblinka**) எனும் வதை களத்திற்கு அனுப்பப்பட்டனர்.

சித்திரை மாதம் *19* ஆம் திகதி *1943* ஆம் ஆண்டு கிறகோவ் யூதச் சேரியின் (**GHetto**) எஞ்சிய *40* ஆயிரம் அளவிலான யூதர்கள் மோர்தேசாய் அனிலேவிச் தலைமையில் *200* பேர் மட்டுமே ஆயுதம் ஏந்தியிருக்க, நாஸிகளுக்கெதிராக கிளர்ந்து எழுந்தனர்.

இந்தக் கிளர்ச்சியை அடக்க நாஸிகள் டாங்கிகளையும், ஆட்டிலறிகளையும் பாவிக்கும் அளவுக்குக் கடுமையாக அந்த மக்கள் போரிட்டனர். 7ஆயிரம் யூதர்கள் கொல்லப்பட்டு ஏராளமான நாஸிகளும் கொல்லப்பட்டனர். வைகாசி மாதம் *16* ஆம் திகதி வரை இந்தக் கிளர்ச்சி நீடித்தது. இறுதியில் மோர் தேச்சாயும் அவனது முதன்மை போராளிகளும் தற்கொலை செய்தனர். மரேக் ஈடின்மன் உட்பட சில போராளிகள் தப்பியோடினர். எஞ்சிய *30*ஆயிரத்துக்கும் சற்று மேற்பட்ட யூதர்கள் அங்கேயே சுட்டுக் கொல்லப்பட்டதும், வதைமுகாம்களுக்கு ஏற்றி அனுப்பப்பட்டதும் என இல்லாதொழிக்கப்பட்டனர். கிறகோவ் யூதச்சேரி தீயிட்டு கொளுத்தப்பட்டது.

தை மாதம் *1945* ஆம் ஆண்டு வார்சோவை விட்டு ஜேர்மனியர் துரத்தியடிக்கப்பட்ட வேளையில், அங்கிருந்த யூதர்களின் எண்ணிக்கை வெறும் இருபதே பேர்.

அவர்களில் இந்தப் படத்தின் கதைநாயகன் வாடிஸ்யாவ் ஸ்பீல்மனும் ஒருவர்.

ஸ்பீல்மன் ஒரு பியானோ இசைக்கலைஞன். போலந்தின் புகழ்பெற்ற இசையமைப்பாளன். *1935* ஆம் ஆண்டிலிருந்து வார்சோ வானொலியூடாகவும் மக்களுக்கு பரிச்சயமான இளம் வாலிபன். இசை இவனுக்கு உயிர். புரட்டாதி மாதம் *23* ஆம் திகதி *1939* ஆம் ஆண்டில் நேரடி இசை ஒலிபரப்பொன்றில் இவன் பியானோ இசைத்துக் கொண்டிருந்தபோது, வானொலி நிலையத்தின் மீது வீழ்கிற குண்டு வார்சோ வானொலியை அமைதியாக்குகிறது. அத்துடன் இந்த இசைக்கலைஞனின் இருத்தலுக்கான போராட்டத்தைச் சித்தரித்துக் கொண்டு படம் தொடங்குகிறது.

தாய், தந்தை, இரு சகோதரர்கள் - ஸ்பீல்மன், ஹென்றிக் இரு சகோதரிகள் - ஹலீனா, றெஜீனா. போர் மூண்டு விட்டது. நேசநாட்டுப்படைகள் வந்து விடும் என்ற நம்பிக்கை மட்டும் கொண்டு




வாழ்வு நகர்கிறது. ஆனால் யூத இனம் மீதான நாஸி அடக்குமுறைகள் படிப்படியாய் மேலோங்கி ஸ்பில்மனின் குடும்பமும் வதை முகாமுக்கு அனுப்பப்படுகிறது.

உயிர் தப்பலாம் என்ற நப்பாசையில் நாஸிப்படைகளுடன் இணைந்து பணியாற்றும் யூதக் கைக்கூலிகளுள் ஒருவனான இற்ஸாக் ஹெல்லர் ஸ்பீல்மனை மட்டும் அவனது குடும்பத்தாருடன் இணைந்து ரயிலில் ஏற விடாது தடுத்து விடுகின்றான். வார்சோவில் தனித்து விடப்பட்ட ஸ்பீல்மன் எஞ்சியிருந்த யூதத் தொழிலாளர்களுடன் நாஸிகளின் கட்டட வேலைகளில் ஈடுபடுகிறான். அவனுக்கு முன்பே பழக்கமான பொலிஸின் நண்பர்களின் உதவியாலும் போரின் இறுதி நாட்களில் நாஸிப்படை அதிகாரி வில்ம் ஹோசன்பில்ட் உதவியாலும் காப்பற்றப்படுகின்றான். போர் முடிவுற்றதும், மீண்டும் வார்சோ வானொலியில் அவனது பியானோ ஒலிக்க ஆரம்பிக்கிறது.

மிக எளிய ஒரு வாழ்வியல் யதார்த்தம் படம் முழுவதும் அடிநாதமாய் தொனிக்கிறது. உயிர் வாழ்தலுக்கான போராட்டம் தொடங்குகிறது. அது இடிபாடுகளுக்குள்ளும், மரண பயத்துக்குள்ளும், அவலங்களுக்குள்ளும், இருத்தலுக்குமான வேட்டையால் உந்தப்படுகிற மனிதனின் நாட்குறிப்பாக நகர்கிறது. **The Pianist** படத்தின் இயக்குநர் ரோமன் பொலன்ஸ்கி சொல்வதுபோல் இந்தப் படம் இசையில் வலிமையை வாழ்வதற்கான அவாவினை, தீமையை எதிர்ப்பதற்கான துணிச்சலை எடுத்துச் சொல்கிற நிரூபணம் தான்.

படம் முழுவதுமே விரவிக் கிடக்கிற அவலங்களைத் தாண்டி, எமது பார்வை விரிகையில் அவலங்களை ஏறி மிதித்தபடி பயணித்துக்கொண்டிருக்கும் இந்தக் கதையின் நாயகனுடன் நாமும் சமாந்தரமாகப் பயணிக்க முடிகிறது. அவனாகவே வாழ்ந்து பார்க்க முடிகிறது.

வாழ்வில் பூரணமான நம்பிக்கை வைப்பது குறித்து இந்தப் படம் பேசுகிறது. உயிர் வாழுதலுக்கான போராட்டத்தில் இசை தான் இவனுக்கு அளவிட முடியாத சத்தியைக் கொடுக்கிறது.

படம் முழுவதும் இசைக்கும் இவனுக்குமான ஆன்மப் பிணைப்பு இறுகிக்கிடக்கிறது. படத்தின் ஆரம்பக்காட்சியில் வாரிவிடப்பட்ட முடி, சாந்தமான சவரம் செய்யப்பட்ட முகம், கோட்டும் சூட்டுமாய் அமர்ந்து பியானோவை இசைக்கின்றான். வானொலி ஒலிப்பதிவு நடக்கிறது. குண்டு விழும் ஓசைகேட்டு ஒலிப்பதிவாளன் இசைப்பதை நிறுத்திவிட்டு ஓடித்தப்புமாறு சைகை செய்தபடி ஓடுகிறான்.

இவனோ அசைய மறுத்து இசைத்துக் கொண்டிருக்கிறான். இசையின் ஆழங்களில் மூழ்கி, நிகழ்வுகளின் தீவிரம் உணர மறுக்கிற கலைக்கிறுக்கனை இங்கு நாம் காண்கிறோம்.

வறுமையின் விளிம்பில் நிற்கிற வேளையில் பியானோவை "அடிமாட்டு" விலை கேட்டு வருகிற வியாபாரியிடம், குடும்பத்தார் பேரம் பேசுகிறார்கள். பணத்தைக் கூட்டித்தர மறுக்கும் வியாபாரியிடம், நாற்காலியில் தலை குனிந்தபடி அமர்ந்திருக்கும் நாயகனோ "எடுத்துக்கொண்டு போ" என்கிறபோது இசைக் கருவியின் தந்திகள் அறுந்துபோகிற ஒலியலைகளால் உணர்வுகள் எதிரறைகின்றன.

கிறகோவ் யூதச் சேரியைவிட்டுத் தப்பி, நண்பனின் உதவியுடன் மறைவிடம் ஒன்றில் இவன் மறைந்து வாழ்கிறான். சத்தம் சந்தடி ஏதும் ஏற்பட்டால் அயலவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள். அவனது அறையின் மூலையொன்றில் மூடிய நிலையில் ஒரு பியானோ கருவியும், கலைஞனும்.

இணைய முடியாதபடி கட்டுகளால் உயிர் பிழியப்படுவதாய் வலி ஒருகணம். மெல்ல மூடியைத் திறந்து, பியானோவின் கட்டைகள் மீது கைபடாதபடி, காற்று வெளியில் அவனது விரல்கள் களி நடனம் புரிகின்றன. கட்டுகள் தடதடவென அறுபட, விடுவிடுவென விண்ணுயர்கிற பெருமிதம் மறுகணம், தலையைத் தீர்க்கமாக இருபுறமும் உலுக்கி, கண்களை மூடி, மழைத்துளிகளின் தெறிப்பாய் விரல்கள் குதிக்க, ஆயிரமாயிரம் ரசிகர்களுக்கு முன்னே அமர்ந்து இசைக்கின்ற கம்பீரமான கலையுன்னதம் அவனுள் இறங்குகிறது. "எங்கள் குரல் வளை நெரிக்கப்படினும், உரக்கப் பாடுவோம் விடுதலைக்கீதம்..." எங்கோ கேட்ட ஒரு கவிஞனின் வரிகள் எனக்குள் எதிரொலிக்கின்றன.

இறுதிக் காட்சிகளில் நாஸிப் படை அதிகாரி விலம் ஹோசன்ஃபீல்ட் இடிந்துபோன தன் வீட்டில் ஒளிந்திருக்கும் நம் கலைஞனைக் காண்கிறான். பியானோவை இசைத்துக் காட்டுமாறு கேட்கிறான். பியானோவின் மேற்பலகையில் நாஸித் தொப்பியும், நாஸிமேல் கோட்டும் கிடக்கின்றன.

கலைஞன் இசைக்கத் தொடங்குகிறான். மிக மென்மையாக. ஆனால் ஆழமாகத் தொடங்குகிற இசை விறுவிறுப்பாகி, உச்சஸ்தாயிகளில் ஊஞ்சலாடி, அவனது விரல்களின் தாவல் நம் விழிகளைக் கட்டிப்போட, இசை செவிகளை ஈர்க்கிறது. நாஸிப் படை அதிகாரிக்குள் பிரமாண்டமாக எழுந்து நிற்கும் மிருகத்தை ஆயுதங்கள் ஏதுமின்றி தன்னந்தனியாக நின்ற அந்தக் கலைஞனின் விரல்களில் பிறந்துவரும் இசை அடித்துப் போட்டு விடுகிறது. மனிதனாக எழுந்து வருகிறான் அந்த அதிகாரி "யூதனே, நீ சாப்பிட்டாயா?" என்று கனிவுடன் கேட்கிறான்.

போர் முடிவில் ரஷ்யப் படைகளிடம் சரணடைந்த நாஸிப் படையினரை நோக்கி வதை முகாமிலிருந்து விடுதலையாகும் ஒரு யூதன் கத்துகிறான். "வெறியர்களே, எனது வயலினைப் பறித்தீர்கள் எனது ஆன்மாவையும் பறித்தீர்கள்".

ஆம்! கலைஞனிடமிருந்து கலையைப் பறிப்பதும், உயிரைப் பறிப்பதும் ஒன்றுதான். ஆனால் தனது கலையை, இசையைப் பறிகொடுக்க மறுத்த, தனது வலியெல்லாம் திரட்டி அதைக் காப்பதில் ஒரு போராளியாக மாறி நிற்கிற, ஒரு கலைஞனை இந்தப் படத்தில் பார்க்கிறோம்.

கலை உன்னதமான ஒரு ஆயுதம். கலைஞன் ஒருவனின் வாழ்க்கையை இங்கே அது மீட்டுக் கொடுத்திருக்கிறது. வாழ்க்கை இனிமையான சங்கீதம். இடையறாத அதன் பொழிவைப் புரிந்து கொள்பவனுக்கு மட்டும்தான் அது தன்னைப் புலப்படுத்துகிறது. அதன் இடையறாத பொழிவை நமது கலைஞன் இடிபாடுகளுக்குள்ளிருந்தும் கேட்கிறான். தனிமையின் கண்களிலும். வெடி ஓசைகளூடாகவும் கேட்கிறான். வாழ்வதற்கான எல்லா உரிமையும் மறுக்கப்பட்டு ஏறத்தாழ நிர்வாணியான மனநிலையில் நாகியற்று நிற்கிற அவனுக்கு அந்த இசையின் இடையறாத பொழிவு மட்டுமே நம்பிக்கை ஊட்டுகிறது. கிறகோவ் யூதச் சேரியில் வதை முகாமுக்கு அனுப்பப்படவென முத்திரை குத்தப்பட்ட **The Pianist** வாழ்வின் ஒவ்வொரு வாசலுக்கும் வந்து தட்டுகிறான். ஒவ்வொரு கதவாகத் தட்டுகிறான். பலமாக, மிகப் பலமாகத் தட்டுகிறான். இறுதியில் இதோ ஒரு கதவு அவனுக்காகத் திறக்கிறது. வெளியே வருகிறான். ஒளிக்கிரணங்கள் அவனை வாரி அணைத்து வரவேற்கின்றன. வாழ்க்கை அவனுக்குத்தந்த வரவேற்பின் பூரிப்பு உதிரம் வழியோடி விரல்களில் நிறைகிறது. இதோ! மீண்டும் வார்சோ வானொலியில், பியானோ அவனது பூரிப்பை இசைக்குறிப்புகளால் மொழி பெயர்க்கிறது. வெறுமையின் வெப்பம் படர்ந்து வெளிகளெல்லாம் அவனது ஆன்ம சங்கீதத்தில் கரைந்து போகின்றன.

வாடிஸ்யாவ் ஸ்பீல்மன் யுத்தம் முடிவுற்றதும் தனது நினைவுப் பதிவுகளை "ஒரு நகரத்தின் மரணம்" என்ற நூலாக எழுதினார். இந்த நினைவுப் பதிவுகளை ஒளி ஓவியம் ஆக்கிய றோமன் பொலன்ஸ்கியும், கிறகோவ் யூதச்சேரியின் காலங்களில் சிறுவனாக, அதன் அழியாத நினைவுகளைச் சுமப்பவர் - இந்த இரு கலைஞர்களும் இணைந்து படைத்த இந்தத் திரைப்படம் நம் ஒவ்வொருவராலும் பார்க்கப்படவேண்டியது. இந்தப் படம், நமது விடுதலைப் போராட்ட வரலாற்றின் சொல்லப்படாத சோகங்களை சொல்லியாக வேண்டும் என்ற அவாவை யாரிடமாவது கிளறிவிடாதா என்ற ஆதங்கம் எனக்குள் எழுகிறது. உள்ளார்ந்த காயங்கள் ஒருபோதும் ஊமையாகி விடுவதில்லை. என்றோ ஒருநாள் வெளிப்பட்டே தீரும். அப்போது அத்தகைய திரைப்படைப்புகள் நம்மிடமிருந்து வெளியாகலாம். அன்றும் உலக மானிடத்தின் கண்களிலிருந்து நமக்காகவும் கண்ணீர் சிந்தும். ✶

## கம்போடியாவிலுள்ள பாடசாலையில்
# மர்ம நபர்களால் பிடிக்கப்பட்ட மாணவர்கள் பொலிஸாரால் மீட்பு

நாம்டெங்

கம்போடியா நாட்டின் பாடசாலை ஒன்றில் அத்துமீறி நுழைந்த மர்ம மனிதர்கள் 40 மாணவர்களைச் சிறைப்பிடித்தனர். இதனையடுத்து மாணவர்களை மீட்க வந்த பொலிஸார் கடத்தல் காரர்களுடன் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர்.

இதில் கனடா நாட்டு மாணவி உயிரிழந்ததுடன் கடத்தல் காரரில் ஒருவரும் உயிரிழந்தார். 7 மணி நேரத்தின் பின்னர் கடத்தல் காரர்கள் கைதானார்கள்.

கம்போடியா நாட்டின் வடமேற்குப் பகுதியில் அங்போர்வாட் எனப்படும் 800 ஆண்டுகள் பழமையான கோவில் வளாகத்துக்கு அருகேயுள்ள சியம்ரீப் நகரத்துக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தருவார்கள். இவர்கள் தங்குவதற்கு ஆடம்பரக் ஹோட்டல்கள் பல அங்கு உள்ளன. வெளிநாடுகளைச் சேர்ந்த பலர் இங்கு பணியாற்றி வருகின்றனர். அவர்களின் குழந்தைகள் படிப்பதற்காக சர்வதேச பாடசாலைகள் உள்ளன. இந்தப் பாடசாலையில் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா ஜப்பான், தாய்வான், இந்தியா, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் ஆயுதம் தாங்கிய மர்ம நபர்கள் பலர் அந்தப் பாடசாலைக்குள் நுழைந்து 29 சிறுவர்கள் உட்பட மொத்தம் 40 மாணவர்களைச் சிறைப்பிடித்தனர்.

இதுகுறித்துத் தகவல் கிடைத்த பொலிஸார் பாடசாலைக்கு விரைந்து சென்றனர். பொலிஸாரைப் பார்த்ததும் பல குழந்தைகளை தூக்கிக்கொண்டு வாகனத்தில் ஏறி அங்கிருந்து தப்பியோட கடத்தல் காரர்கள் முயன்றனர்.

இதைப் பார்த்ததும் பொலிஸார் வாகனத்தின் ரயர்களை நோக்கிச் சுட்டனர். கடத்தல் காரர்கள் பதிலுக்குச் சுட்டதில் கனடா நாட்டுச் சிறுமி உயிரிழந்தார். இதேவேளை பதிலுக்குப் பொலிஸார் சுட்டதில் கடத்தல்காரர்களில் ஒருவர் பலியானார். மற்றைய 3 கடத்தல் காரர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

அதன் பின்னர் பாடசாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்தக் கடத்தல் நாடகம் முடிவுக்குவர 7 மணிநேரம் ஆனது.

கடத்தல்காரர்கள் எதற்காக மாணவர்களைச் சிறைப்பிடித்தார்கள் என்பது பற்றித் தெரியவில்லை. அவர்கள் மாணவர்களைச் சிறைப்பிடித்ததும், அவர்களை விடுவிக்க வேண்டுமானால் பணம், ஆயுதம், தப்பிச்செல்ல வாகனமும் வேண்டுமென்று கூறியிருந்தனர்.

## புளோரிடாவில் விமான விபத்து



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள லாடர்டெல் விமானத் தளத்திலிருந்து டி.சி.3 சரக்கு விமானம் புறப்பட்டு சென்றது. பகாமாஸ் நோக்கிப் புறப்பட்ட அந்த விமானம் சிறிது நேரத்தில் கோளாறு ஏற்பட்டு தாறுமாறாக ஓடியது.

அங்குள்ள சாலையில் சிறிது தூரம் ஓடியஅந்த விமானம் பின்னர் வெடித்து சிதறியது. விமானத்தின் சில பகுதிகள் தீப்பிடித்து எரிந்தன. விமானத்தில் இருந்த விமானி, துணைவிமானி மற்றும் ஒரு ஊழியர்அவசர கதவு வழியாக குதித்து தப்பிவிட்டனர்.

## உலக நோக்கு

# இந்தியாவுக்குப் பற்றியாட் ஏவுகணை அமெரிக்கா விற்பனை செய்ய சம்மதம்

புதுடெல்கி

நவீன ரக பற்றியாட் ஏவுகணைகளை இந்தியாவுக்குக்கு விற்பதற்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப்முகர்ஜி இந்த மாதஇறுதியில் அமெரிக்கா செல்கிறார். அதற்கு முன்னதாக பற்றியாட் ஏவுகணை விற்பனைக்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அணுகுண்டுகளுடன் செல்லும் குறுகிய நடுத்தரத் தொலைவு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கக்கூடியவை பற்றியாட் ஏவுகணைகள்.

அமெரிக்கா இவற்றை விற்க முன்வந்துள்ள தகவலை இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

பற்றியாட் ஏவுகணைகளை லொக்கீட் மார்ட்டின் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த ஏவுகணை தொடர்பான தகவல்களை இந்த நிறுவனம் இந்தியாவுக்கு விளக்கமாக வழங்கவும் அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

# கலிபோர்னிய மாநிலத்தில் நேற்றும் நிலநடுக்கம்!

லொஸ்ஏஞ்சல்ஸ்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 புள்ளியாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமிப்பேரலைகள் எழக்கூடும் என புவியியற்துறை எச்சரிக்கை விடுத்தது. இதனால் பரபரப்பு ஏற்பட்டதுடன் கரையோரப் பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடம்தேடி ஓடினார்கள். ஆனால் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில், கலிபோர்னியாவில் நேற்றுக்காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 புள்ளியாகப் பதிவானது. லொஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு 126 கிலோ மீற்றர் கிழக்கே யுகைப்பாவில் இந்த நிலநடுக்கம் மையங்கொண்டிருந்தது.

நிலநடுக்கத்தில் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன. வீட்டு யன்னல் கண்ணாடிகள் நொருங்கியது. சுனாமிபேரலை எழக்கூடும் என்ற அச்சத்தால் பொதுமக்கள் பாதுகாப்பான இடம்தேடி ஓடினார்கள்.

கடந்த இரண்டு நாட்களில் இரண்டு தடவை நிலநடுக்கம் ஏற்பட்டது. ஒரே வாரத்தில் 3 முறை கலிபோர்னியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் தேவையில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்

யாழ்ப்பாணம்

பொதுக்கட்டமைப்புக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரேயே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுக்கட்டமைப்புக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதனை நாடாளுமன்றுக்கு கொண்டுவர முயற்சி செய்தால் அதற்கு விடுதலைப் புலிகளும் தமது எதிர்ப்பினைத் தெரிவிப்பர்.

அரசும், விடுதலைப்புலிகளும் பொதுக் கட்டமைப்புக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர், அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆதரவளிக்கும். ஆனால், உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க நேரிடுமெனவும் அவர் தெிவித்துள்ளார். (தே)

# மகோற்சவம்

சாவகச்சேரி

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பாள் வாணவீரகத்தி விநாயகர் ஆலய திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். உற்சவ காலங்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் சி.கா.கமலநாதனால் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (24)

# யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

யாழ்.வலய பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழ் மொழித்தின போட்டியின் மாவட்ட மட்ட முடிவுகளின் தொடர்ச்சி வருமாறு

**இசைக்குழு II**

1 ஆம் இடம் கொக்குவில் இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் வேம்படி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் யாழ்.இந்துக் கல்லூரி.

**நடனம் (தனி)**

1 ஆம் இடம் வ.ஸ்ரீதரா (யாழ் இந்து மகளிர் ஆரம்ப படசாலை), 2 ஆம் இடம் சி.சாரங்கன் (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), 3 ஆம் இடம் றி.றினோஜா (திருக்குடும்ப கன்னியர்மடம்).

**நடனம் (தனி)**

1 ஆம் இடம் ஜெ.திவ்யா (கொக்குவில் இந்துக்கல்லூரி), 2 ஆம் இடம் சி.லீயுசா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் ஆ.தாட்சாயினி (திருக்குடும்ப கன்னியர் மடம்).

**நடனம் (தனி)**

1 ஆம் இடம் சி.பவித்திரா (திருக்குடும்ப கன்னியர் மடம்), 2 ஆம் இடம் சி.பிரவீணா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் பா.சரன்யாதேவி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**நடனம் (தனி)**

1 ஆம் இடம் ஞா.குயிந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் ஜெ.காஞ்சனா (சுண் டிக்குளி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் பு.தர்ஷிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நடனம் (தனி)**

1 ஆம் இடம் சி.ரிஷாங்கி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் வ.பிரசாந்தினி (பெரிய புலம் மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம் சி.மேகிலா (கனகரட்னம் மத்திய மகாவித்தியாலயம்).

**நடனம் (குழு)**

1 ஆம் இடம் யாழ்.மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் வேம்படி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

1 ஆம் இடம் வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**நாடகம்**

1 ஆம் இடம் திருக்குடும்ப கன்னியர்மடம், 2 ஆம் இடம் யாழ். மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் பெரியபுலம் மகாவித்தியாலயம்

**வில்லுப்பாட்டு**

1 ஆம் இடம் புனித திரேசாள் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் கோப்பாய் நாவலர் வித்தியாலயம், 3 ஆம் இடம் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

**விவாதம்**

1 ஆம் இடம் யாழ்.மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் யாழ். இந்துக்கல்லூரி, 3 ஆம் இடம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, புனித திரேசாள் மகாவித்தியலயம்.

**வினாவிடை**

1 ஆம் இடம் யாழ்.மத்திய கல்லூரி, 2 ஆம் இடம் சோமஸ் கந்த கல்லூரி, 3 ஆம் இடம் வேம்படி மகளிர் கல்லூரி.

**இசைநாடகம்**

1 ஆம் இடம் வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் யாழ்.இந்துக்கல்லூரி.

**நாட்டுக்கூத்து**

1 ஆம் இடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

(முற்றும்) (58)

# வலி.வடக்கு பிரதேச செயலகம் நடத்திய தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

உடுவில்

வலி.வடக்கு பிரதேச செயலகம் நடத்திய தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

**திறந்தபோட்டி (கவிதை)**

1 ஆம் இடம் செ.அபிராமி, 2 ஆம் இடம் தே.விக்னேஸ்வரன், 3 ஆம் இடம் தே.பகீரதன்

**திறந்தபோட்டி (சிறுகதை)**

1 ஆம் இடம் திருமதி மா.மதிவதனன், 2 ஆம் இடம் திரு.ப.உதயகுமார் ,3 ஆம் இடம் செல்வி கு.பார்மதி.

**திறந்தபோட்டி (ஓவியம்)**

1 ஆம் இடம் திரு.க.சந்திரகுமார், 2 ஆம் இடம் திருமதி வா.சத்தியரூபன், 3 ஆம் இடம் திருமதி போ.லோகரஞ்சன்.

**சிரேஷ்ட பிரிவு (ஓவியம்)**

1 ஆம் இடம் திரு.சி.சிவரதன், 2 ஆம் இடம் திரு.பா.நீதுஜன்.

**கனிஷ்ட பிரிவு (ஓவியம்)**

1 ஆம் இடம் மு.தர்ஷனா, 2 ஆம் இடம் சு.ஞானாநந்தசர்மா, 3 ஆம் இடம் ச.யதுகுலன்.

**சிரேஷ்ட பிரிவு (கட்டுரை)**

1 ஆம் இடம் செ.அபிராமி, 2 ஆம் இடம் ந.ஜெயசாஜி, 3 ஆம் இடம் வே.ஜெயரதி.

**கனிஷ்ட பிரிவு (கட்டுரை)**

1 ஆம் இடம் சி.சுகன்யா, 2 ஆம் இடம் இ.ஸ்ரீவானி, 3 ஆம் இடம் சி.சிவறதனி.

**திறந்தபிரிவு (நாட்டார்பாடல்)**

1 ஆம் இடம் திருமதி தி.நேசபவானி, 2 ஆம் இடம் திருமதி லோ.போதினி.

**கனிஷ்ட பிரிவு (நாட்டார்பாடல்)**

1 ஆம் இடம் செல்வி வர்சினி கேதீஸ்வரன், 2 ஆம் இடம் செல்வி தர்ஷா வெற்றிவேல், 3 ஆம் இடம் செல்வி மகிழினி சிவனேஸ்வரன்.

**திறந்த பிரிவு (நடனம்)**

1 ஆம் இடம் கலாசாரப் பேரவை வலி வடக்கு தெல்லிப்பளை. (101)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பி.யினரின் வசமிருந்த அமைச்சுக்கள் மீது விசாரணை

கொழும்பு —

ஜே.வி.பி. பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு அமைச்சுக்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி விசாரணைப்பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர், இந்த அமைச்சுக்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின்போது இந்த நான்கு அமைச்சுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களது செலவீனங்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட செலவீனங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(தே)

# கூட்டணி அரசாங்கம் முறிவடைந்ததற்கு நாசகார அரசியல்வாதிகளே பொறுப்பு!

## *ரில்வின் சில்வா கூறுகிறார்*

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - கூட்டணி முறிவடைந்த காரணத்தால் ஏற்படப்போகும் விபரீதங்களுக்கு நாசகார அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டுமென்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் சுசில் பிறேம ஜயந்துக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த நாசகார அரசியல்வாதிகளின் நாட்டைத் தாரைவார்க்கும் நடவடிக்கைகளை ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. நாட்டின் நிரந்தர அமைதி, சமாதானம் என்பன தொடர்பாக ஜே.வி.பி. மேற்கொண்டுள்ள நகர்வுகள் முடிவடைந்துவிடவில்லை. இது ஆரம்பமே என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# அதிகாரத்தை தக்கவைக்கும் முயற்சியில் அரசாங்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தொடர்ந்தும் அதிகாரத்தைத் தக்கவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் -

கடந்த 14 மாதகாலமாக அரசாங்கத்திற்கும், அதன் பங்காளிக் கட்சிக்கும் இடையிலான சர்ச்சைகளை மக்கள் மத்தியில் கொண்டுவந்து மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பினைக் கைவிட்டுள்ளனர்.

வாழ்க்கைத் தரத்தின் செலவினங்களை அதிகரித்ததுடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்துள்ளனர்.

இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னர் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி கதைப்பதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினை.....

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு, ஜனநாயக ரீதியான மனித உரிமைகளை மதித்து அனைவரும் ஒற்றுமையாக வாழக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 34 ஜே.வி.பி...

தங்கள் உறுப்பினர்கள் இருபக்கங்களிலும் பிரிந்து அமர்ந்தபோதிலும் அவர்களின் செயற்பாடுகள் ஒன்றாகவே இருக்கும் என ஜே.வி.பி உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

## கொடிகாமத்தில்...

இனவாதிகளும் எதிர்த்து வருகின்றனர்.

அவர்கள் தமது இனவாதப்போக்கைக் கைவிட்டு பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் யாழ்.குடாநாட்டில் - உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் காணிகளைச் சுவீகரித்துள்ள படையினர் அவற்றை உடன் விடுவிக்க வேண்டும் எனக் கோரியும் மூன்றாவது நாளாக நேற்று கொடிகாமத்தில் இந்த எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக கொடிகாமம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இதனால் நகரின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## புளொட்..

யோர் காயமடைந்தனர்.

காயமுற்ற புளொட் உறுப்பினர் ஒருவர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பொதுக்...

ஆட்சிக்கு வரும் ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்கு ஒரு வருட காலத்திற்குள் மிகப்பெரிய எதிர்ப்புக்கள் தோன்றும். இந்தவேளை, ஜனாதிபதி தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர், மீண்டும் அரசைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச் செல்லலாமெனவும், இதன்போது இலகுவாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைப் பிடிக்குமெனவும் அவரது ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாக அந்தப் பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது. (தே)

## தலைநகர்...

தொடர்பாக முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் ஜனாதி பதி நேற்றுமுன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கொழும்பு நகரின் பாதுகாப்புத் தொடர்பாக ஜனாதிபதி ஆலோசனை நடத்தினார். இதன்படிநேற்றுமுன்தினம்முதல் கொழும்பு துறைமுகத்தின் முன்பாக விமானப்படை மற்றும் கடற்படையின் மேலதிக படையணிகள் இரண்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (தே)

# புத்தர்சிலையை அகற்றுவதற்கான திருமலை நீதிவானின் உத்தரவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை!

திருகோணமலை —

திருகோணமலை பிரதேசத்தில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வணக்க ஸ்தலங்களை அகற்றுமாறு திருமலை மஜிஸ்ரேட் நீதிவான் விடுத்திருந்த உத்தரவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கடந்த மே மாதம் 25 ஆம் திகதி திருமலை மஜிஸ்ரேட் நீதிவான் அளித்த தீர்ப்பை நிறுத்திவைக்குமாறு தந்திமூலம் மேன்முறையீட்டு நீதிமன்று அறிவித்துள்ளது.

திருமலை ஓட்டோ உரிமையாளர்களின் சங்கத்தலைவர் ஏ.எல். கீர்த்தி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்று இந்த தடை உத்தரவை விடுத்துள்ளது.

திருமலைநகரில் புத்தர் சிலையொன்று அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் இந்த நிலைமை குறித்து பொலிஸாரினால் நீதிமன்றில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இதனையடுத்து புத்தர் சிலை உட்பட திருமலை நகரில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட வணக்க ஸ்தலங்களை அகற்றுமாறு மஜிஸ்ரேட் நீதிவான் பிறப்பித்த உத்தரவு சட்டத்திற்கு உட்பட்டதாக இல்லையென மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலை மஜிஸ்ரேட் நீதிவானின் உத்தரவை இம்மாதம் 30 ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறும், பிரதிவாதிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி ஆஜராகுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்றை நடத்த ஜே.வி.பியுடன் பேச்சு!

கொழும்பு —

அரசாங்கத்திலிருந்து விலகிக் கொண்டாலும் நாடாளுமன்றத்தை நிலையாகக் கொண்டுசெல்ல ஜே.வி.பி. தலைவர்களுடன் பேசி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்சவைச் சந்தித்து இதுகுறித்துப் பேசத் திட்டமிட்டிருப்பதாக அவர் கூறினார்.

அடுத்த வரவு - செலவுத்திட்டம் வரை நாடாளுமன்றத்தை எவ்வித பிரச்சினையும் இன்றி கொண்டுநடத்த முடியும் என்றும் அடுத்த வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு இடமிருப்பதாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

## பிரதேச சபையை...

அதிகாரங்களைக் கொண்டவையாகும்.

இதனை ஆட்சேபிக்கும் பிரிவினர் யுத்தம் ஒன்றின் மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாமென நினைத்தால் நாட்டில் 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதில் எனது மகனும் இடம்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சுனாமியின் பின்னர் ஏற்படுத்தப்படவுள்ள இந்த பொதுக்கட்டமைப்பினால் சமாதானம் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் முதன் முறையாக இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை சமாதானத்திற்கு அடிப்படையாக இருக்குமென அரசாங்கம் நம்புகிறது. ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன எவருக்கும் தெரியாமல் நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைத்தார். அதன்போது யாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அதன்பின்னர் இந்திய - இலங்கை உடன்படிக்கை 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கை என்பனவும் மக்களுக்கு தெரியாமலேயே செய்து கொள்ளப்பட்டன. எனினும் எமது அரசாங்கம் அவ்வாறு செய்ய எண்ணவில்லை.

முன்னர் பொதுக் கட்டமைப்பை நாடாளு மன்றில் சமர்ப்பிப்பதில்லை என திர்மானிக்கப்பட்டருந்த போதும், பின்னர் ஏற்பட்ட எதிர்ப்புகளால் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் அது விசேட பிரேரணையாக சமர்ப்பிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி நேற்று குறிப்பிட்டார்.

## ஹெல்கிசனின்...

தொடர்பான திகதி தீர்மானிக்கப்படும். ஹெல்கிசன் இங்கு தங்கியிருக்கும் போதே இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்றும் -

அந்த நிகழ்வில் ஹெல்கிசனும் கலந்து கொள்வார் எனவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஆளும் கூட்டணியில் இருந்து ஜே.வி.பி விலகியுள்ள நிலையில் - பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட அரசாங்கத்துக்கு உற்சாகம் ஊட்டும் வகையிலேயே ஹெல்கிசனின் விஜயம் அமையும் என்றும் கூறப்படுகிறது.

# பாடசாலை கொட்டகை சரிந்து 14 மாணவர்கள் படுகாயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள வாகரை மகாவித்தியாலயத்தில் தற்காலிக பாடசாலை கொட்டகை சரிந்து விழுந்ததில் 14 மாணவர்களும் 2 ஆசிரியர்களும் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. சுனாமியால் வாகரை மகாவித்தியாலய கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்ததையடுத்து இந்தப் பாடசாலை தற்போது தற்காலிக கொட்டகைகளில் இயங்கிவருகிறது. அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தகரத்தினாலான தற்காலிக கொட்டகையே தற்போது வீசுகின்ற காற்றிற்கு ஈடு கொடுக்க முடியாமல் சரிந்து விழுந்துள்ளது. கடந்த வாரமும் வாகரைப் பிரதேசத்திலுள்ள பால்சேனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் தற்காலிக கொட்டகை சரிந்து விழுந்ததும் குறிப்பிடத்தக்கது.

# புதிய அமைச்சர்கள் நியமனம் இல்லை!

கொழும்பு —

ஆளும் கூட்டணியில் இருந்து ஜே.வி.பி விலகியதையடுத்து அந்தக் கட்சியின் சார்பில் அரசாங்கத்தில் இடம்பெற்ற எட்டு அமைச்சர்களும் பதவி விலகிச் சென்றுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக புதிய அமைச்சர்களை நியமிப்பதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போது பதவியில் இருக்கும் அமைச்சர்கள் சிலரையே பதில் அமைச்சர்களாக நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா முக்கிய அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தளபதி...

விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் இவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

கேணல் பானுவுடன் மட்டு. - அம்பாறை மாவட்டத் தளபதி ராம், அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜனார்த்தனன், மட்டக்களப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், ஜெயந்தன் படையணித் தளபதி சாந்தன், மட்டு. - அம்பாறை மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி ஆகியோரும் ஹெலிகொப்டரில் சென்றனர்.

இவர்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கட்டளைத் தளபதிகள் கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் சசிக்குமார் உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

தலைமைப்பீடத்துடனான ஆலோசனைகளைகளுக்காக வன்னி வந்திருந்த புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுக்க அரசு மறுத்து வந்தது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து திருகோணமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துக்கு கடந்த புதன்கிழமை அரசு ஹெலி வசதி வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## திடீர்...

செயற்பட முடியுமென அரசாங்கத்தில் உள்ள சிலர் எண்ணம் கொண்டுள்ளனர்.

இதற்கிடையே, ஜனாதிபதியின் பிரதிநிதிகள் குழு - மலையக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் அரசுக்கான ஆதரவு குறித்து கலந்துரையாடல்களை நடத்திவருகின்றது. எனினும் இந்தக் கட்சிகளின் ஆதவைப் பெற்றாலும் அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் கிடையாது.

ஐ.தே.கட்சி மீது முழுமையாகத் தங்கியிருக்கவும் ஜனாதிபதி விரும்பவில்லை என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. அரசாங்க கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் இந்தப் பிரச்சினை குறித்து வெளிப்படையாகப் பேசுவதற்கு விரும்பாதவுடன் - அநேகமாக வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் தேர்தல் நடைபெறும் என்று கருதுகின்றனர். இவ்வாறு தேர்தல் நடந்தால் ஜனாதிபதி தனது பதவியிலிருந்து விலகி பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடலாமென்று எதிர்பார்க்கப்படுவதாக அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# மரண அறிவித்தல்

## அமிர்தநாதர் வொஷிங்ரன் லொய்ஸ்



சில்லாலையை வசிப்பிடமாகக் கொண்ட செல்வன் அமிர்தநாதர் வொஷிங்ரன் லொய்ஸ் என்பவர் 16.06.2005 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

இவர் அமிர்தநாதர் குளோறியா ஜெஸ்ரின் (ஜீரோ) வின் அன்பு மகனும், டயஸ், டினேஸ், ஜெனீஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 18.06.2005 பி.ப. 3 மணியளவில் சில்லாலை கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (இ)


தகவல்:-
அமிர்தநாதர் (தந்தை)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உலக வங்கி உதவியுடன்

# வீடமைப்புத் திட்டம் வெற்றியளித்தால் ஏனைய நிறுவனங்களிடம் உதவிகோரலாம்

## வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் பத்மநாதன்



யாழ்ப்பாணம் —

வீடமைப்புக்கென நிதியுதவி பெறுபவர்கள் கூடிய விரைவில் தமக்கான வீடுகளை அமைத்து உலக வங்கியின் வீடமைப்புத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய நிறுவனங்கள் மூலம் நிதியைப் பெற்று அதன் மூலம் வடக்கு - கிழக்கில் அழிவடைந்த ஏனைய வீடுகளையும் புனரமைக்கலாம் என, வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் முதற்கட்ட வீடமைப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பு அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வீடமைப்புக்கென கொடுப்பனவு பெறும் பயனாளிகள் தமக்கான வீடுகளைப் பூரணமாக அமைப்பார்களானால் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும்.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் 3 லட்சம் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் வீடமைப்பு கடன் பெறுவதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வருடம் வடக்கு - கிழக்கில் 31 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன.

இந்த வருடம் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் நான்கு மாதங்களுள் 1000 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். இப்போது வீடமைப்பு நிதி பெறுபவர்கள் தமக்கான வீடுகளை விரைவாகக் கட்டி முடிக்கும் பட்சத்தில் வரும் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் அடுத்த கட்ட பயனாளிகளுக்கு வீடமைப்பு நிதி வழங்கக்கூடியதாக இருக்கும்.

எனவே இப்போது முதலாம் கட்டமாக பயனாளிகள் தமக்கு வழங்கப்பட்ட வீடமைப்பு நிதியைப் பூரணமாகப் பயன்படுத்தித் தமக்கான வீடுகளை அமைப்பதன் மூலம் - ஏனைய பயனாளிகளும் வீடமைப்பு நிதியைப் பெற உதவுகிறீர்கள். அடுத்த வருடம் 5 ,ஆயிரம் வீடுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு நிதி பெறுபவர்கள் தமக்கான வீடுகளை அமைப்பதற்கு இலகுவாக கட்டட தொழிலில் பயிற்சிபெற விரும்புவர்களால் அவர்களுக்கு கொடுப்பனவுடன் கூடிய கட்டடத் தொழிற்பயிற்சி வழங்கப்படும்.

கூடிய அளவு சனத்தொகை கொண்ட இடங்களில் வசிப்பவர்கள் வேறு இடங்களில் வீடுகளை அமைக்க உத்தேசித்தால் அதற்கு நிதி வழங்குதல் தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு நிதி வழங்கப்படும்.

எனவே, இப்போது வீடமைப்பு நிதி பெறுபவர்கள் கூடிய விரைவில் வீடுகளை அமைத்து இத் திட்டம் வெற்றிபெறும் பட்சத்தில் வேறு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்று வடக்கு - கிழக்கில் அழிவடைந்த இதர வீடுகளையும் புனரமைக்கலாம்.

வீடமைப்புக்கென 150 கோடி ரூபா வழங்குவதற்கு ஐரோப்பிய யூனியன் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் அங்கத்தவர்களுக்கு கலந்துரையாடல்

வடமராட்சி —

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவது தொடர்பாக- கழகத்தின் பழைய மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல பழைய மாணவர்களையும், கழக உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறும், வரமுடியாதவிடத்து அவர்கள் சார்பாக பெற்றோர் கலந்துகொள்ளுமாறும் கழகத்தலைவர் சி. குலசிங்கம் கேட்டுள்ளார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் 'தமிழ்த் தேசியத்தின் குரல்'

யாழ்ப்பாணம் —

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கும், குறைந்தபட்ச நிர்மாணத்துக்குமான பொதுக் கட்டமைப்புக்கு எதிராக தென்னிலங்கையில் பௌத்த - சிங்கள பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து தமது அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் நோக்கில் 'தமிழ்த் தேசியத்தின் குரல்' எனும் நிகழ்வொன்றை நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தவுள்ளனர்.

'தமிழ்த்தேசியத்தின் குரல்' நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், சமூக பொது நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதிநிதிகள் என பல்லாயிரம் பேர் கலந்துகொண்டு தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணயத்துக்கான தேசியத்தின் குரலை ஓங்கி ஒலிக்கவுள்ளனர்.

# அரசாங்க பாடசாலைகளில் புள்ளிவிபர தொகை மதிப்பீடு

கொழும்பு —

அரசாங்க பாடசாலைகளில் புள்ளி விபர தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் கீழ் செயற்படும் சகல அரசாங்க பாடசாலைகளிலும் புள்ளிவிபர தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். எல்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை கல்வி தொடர்பாக எதிர்கால திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த தொகை மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சின் புள்ளிவிபரக் கிளை மேற்கொண்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி உள்ளவாறான அனைத்து விபரங்களும் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

எந்தவொரு பாடசாலையினதும் ஆசிரியர்கள், மாணவர்கள் பௌதீகவளங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரிக்கும் வகையிலான படிவங்கள் கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் தொகை மதிப்பீட்டு நடவடிக்கையை கோட்டக் கல்வி பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு செயலகத்தில் விசேட செயலணிக்குழு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக செயலகத்தின் காணிகள் தொடர்பான விசேட செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற வீடமைப்பதற்கு நிதி வழங்கும் வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது-

யாழ்.குடாநாட்டில் காணிகளுக்கு ஏற்பட்டுவரும் தட்டுப்பாட்டை அறிந்து யாழ்.மாவட்டத்திலுள்ள அரச காணிகளை உடன் இனங்காணுமாறு மேற்படி குழுவிடம் பணித்துள்ளேன். அவர்கள் தற்போது இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைவிட யாழ்.மாவட்டத் தில் காணிகளுக்கான உறுதிகளைத் தொலைத்தவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் காணிகளில் வசிப்பவர்கள், காணிப் பிரச்சினையில் சிக்கியிருப்பவர்கள் மேற்படி குழுவுடன் தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன், யாழ். குடாநாட்டில் நிலத்தடி நீர் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை ஆராயும் வகையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தனது ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வருட இறுதிக்குள் தனது ஆராய்ச்சியின் முடிவை இந்தக் குழு அறிவிக்கும். அதற்கேற்ப நாம் நட வடிக்கை எடுக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாக விகாரையில் தங்கும் பயணிகளிடம் அதிக பணம் அறவிடப்படுவதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ்.நாகவிகாரைக்கு எதிரேயுள்ள விடுதியில் தங்குவதற்கு அதிகளவிலான பணம் அறவிடப்படுவதாக, யாழ்.குடாநாட்டுக்கு சுற்றுலா மேற்கொண்டு வரும் சிங்கள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ். நாகவிகாரையின் முன்பு அமைந்துள்ள விகாரைக்குச் சொந்தமான தங்கு விடுதியில் யாத்திரை மேற்கொள்ளும் சிங்கள மக்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்கு வந்து தங்குவோரிடம் விகாரையின் வளர்ச்சிக்கென அதிகளவு பணம் அறவிடப்படுகிறது.

குறைந்தளவு பணத்துக்கான இடம் கேட்கின்றபோது - விறாந்தை ஒன்றில் படுத்துவிட்டுப் போங்கள் என்று கூறப்படுகிறது. இந்தநிலை மிகவும் மனவேதனையைத் தருகிறது என சுற்றுலா மேற்கொண்டு, யாழ். குடா நாட்டுக்கு வரும் சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சின்னஞ்சிறுசெய்திகள்

## தியான வகுப்பு

யாழ்ப்பாணம் —

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நேற்று முதல் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நாவலர் மணி மண்டபத்தில் காலை 6 மணி முதல், 8 மணிவரை விசேட தியான வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்த விசேட தியான வகுப்புகள் சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த சுவாமி ரமண சைதன்யாவால் நடத்தப்படவுள்ளது.

இந்தத் தியான வகுப்புகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் - மணிமண்டபத்தில் பணியாற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஊழியரிடம் பெயர்களைப் பதிவுசெய்து, தியான வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் என, இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தெரிவித்தார்.

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி - கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 65 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க மண்டபத்தில் தலைவர் பி.சின்னத்துரை தலைமையில் இடம்பெறும் நிகழ்வில்- பிரதம விருந்தினராக கல்வயல் கிராம அலுவலர் க.இராசரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் த.மாலினியும், கணக்காய்வு உத்தியோகத்தர் குமுதினியும் கலந்துகொள்ளவுள்ளனர். (24)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் சத்துணவு வழங்கல்

தொண்டமானாறு சந்நிதியான் ஆசிரமம் சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் இந்தப் பகுதியில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு வாரம் தோறும் சத்துணவு வகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வாரமும் சத்துணவாக - கடலை, அவல், பயறு, நெஸ் பிறே பால்மா, ஜீவாகாரம், கௌபி, சீனி மற்றும் உதவு தொகை என்பன வழங்கப்பட்டு வருவதாக சந்நிதியான் ஆசிரம இயக்குநர் செ.மோகனதாஸ் சுவாமி தெரிவித்தார்.

## சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் நிகழ்வு நாளைமறுதினம் காலை 10 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச, ஊரக அமைப்புகளின் பிரதிநிதிகள், பேராளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் சிங்கள - பௌத்த பேரினவாத சக்தியால் மேற்கொள்ளப்படுகின்ற அராஜக செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பாக பல முக்கிய விடயங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக எழுச்சிப் பேரவையின் முக்கிய பிரமுகர் தெரிவித்தார்.

## சி.பி கணினி கல்வி நிறுவகத்தின் விரிவுரைகள்

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் சி.பி கணினிக் கல்வி நிறுவகத்தின் விரிவுரைகள் யாவும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

முதற்பயிற்சி நெறியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைத்து - 'தகவல் தொழில் நுட்பமும் இன்றைய உலகமும்' எனும் கருப்பொருளில் கருத்துரை வழங்குவார்.

## மண் அணையால் போக்குவரத்துக்கு சிரமம்

மட்டுவில் —

சாவகச்சேரி தபால்நிலைய வீதியில் - பெருங்குளச் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் கடந்த மாதம் நடைபெற்ற திருமண நிகழ்வுக்காக வீதியின் குறுக்காக போடப்பட்ட இரு மண் அணைகள் இன்றுவரை அகற்றப்படாமல் உள்ளன.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள இந்த வீதியில் நகரசபையின் அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்ட இந்த மண் அணையை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (24)

# பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தானாலும் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை!

## அரசியல் குழுத் தலைவர் ஜெயசீலன் தெரிவிப்பு

முழங்காவில்—

விமானம் மூலம் குண்டுகளை வீசி எம்மைக் கொன்று குவித்தபோது பார்த்துக்கொண்டிருந்த இந்தியா - இன்று அரசுக்கு இராணுவத் தளபாடங்களையும், ராடர் கருவிகளையும் கொடுப்பதன்மூலம் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கிறது என முழங்காவில் சமகால அரசியல் குழுத்தலைவர் ஜெயசீலன் தெரிவித்தார்.

முழங்காவில் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

முழங்காவில் பிரதேச மக்கள் விடுதலைப் போராட்டத்தில் எவ்வாறு பங்கு கொண்டனர் என்பது இன்று நடைபெறும் இந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வினூடாக வரலாறு சொல்லி நிற்கிறது.

இன்று பேரினவாத சக்தி எம்மை திசை திருப்பிப் புலிகளிடமிருந்து பிரித்து விடுவதற்கு முயற்சி செய்கின்றது.

எமது தலைவர், இந்த சமாதான காலத்துக்கு முன் தென்னிலங்கை அரசியற் தலைவர்களோடு பேசி எந்தவொரு தீர்வையும் நாம் காண மாட்டோம் என தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார்.

இந்த நிலையில் மேற்குலக நாடுகளின் கோரிக்கைக்கான சமாதான உடன்படிக்கையில் ஈடுபட்டார். இந்தக் காலகட்டத்தில் இலங்கை புலனாய்வுத் துறையினராலும், தேச விரோத கும்பல்களாலும் எமது போராளிகள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இந்தச் சதி முயற்சி மூலம் நிழல் யுத்தம் நடைபெறுகிறது.

அமெரிக்கா, இந்தியா போன்ற சில நாடுகள் எமது பக்கம் சார்ந்தது போல நடித்துக் கொண்டு இலங்கைக்கு போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், இராணுவத் தளபாடங்கள், ராடர் கருவிகள் போன்வற்றை வழங்கி எம்மைப் பயங்கரவாதிகள் என்னும் முத்திரைகளிலேயே இன்னும் வைத்துக்கொண்டு வேடிக்கை பார்க்கிறது.

இன்று எம்மிடம் இருக்கும் கரும்புலி ஆயுதம், விமானப் படை இரண்டிற்கும் இலங்கை அரசு கதிகலங்கி நிற்கிறது.

தமிழர்களாகிய நாம் இன்று எங்கு நிற்கின்றோம் எனச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையில் உள்ளோம். பொதுக்கட்டமைப்பு கைச்சாதிடப்பட்டாலும், எமக்கு சுதந்திரமான வாழ்வு கிடைக்கப்போவதில்லை.

எனவே, தமிழ் மக்களாகிய நாம் இந்த முழங்காவில் பிரதேச மண்ணில் ஓர் எழுச்சிப் படையை உருவாக்கி, எமது தேச விடுதலையை வென்றெடுக்க மீண்டும் ஒரு முறை இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தி எமது தேச விடுதலைப் பயணத்துக்கு அணி திரள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு முழங்காவில் மாவீரர் கலையக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பொதுச்சுடரை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் துணைப் பொறுப்பாளர் அன்பு, முழங்காவில் காவற்துறைப் பொறுப்பாளர் யோகேஸ், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரர் பொதுப் படத்துக்கான ஈகச்சுடரை முழங்காவில் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்து, மலர் மாலை அணிவித்தார்.

அடுத்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கான ஈகச் சுடர்களையும், மலர் மாலைகளையும் அவர்களின் பெற்றோர் ஏற்றி அணிவித்தனர்.

சிறப்புரையை கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பசுபதிப் பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா மாணவர்களின் கலை நிகழ்வுகளும், முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மகளிர் கலைபண்பாட்டுக் குழுவினரின் இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், துணைப் பொறுப்பாளர் பபில், பிரதேச கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர்பூவிழி, போராளிகள் தேசிய எழுச்சிப் பேரவையினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வவுனியா - சேமமடு பகுதியில் வள்ளுவர் முன்பள்ளி திறப்பு!




வவுனியா—

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட வள்ளுவர் முன்பள்ளி திறப்புவிழா - வவுனியா சேமமடுவில் நேற்றுமுன்தினம் காலை 12.45 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஏற்றினார். தேசியக்கொடியை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் ஏற்றினார். பி.எஸ்.சி.டி.சி கொடியை வவுனியா தெற்கு வலய இணைப்பாளர் சி.அருள்வேல் நாயகி ஏற்றி வைத்தார்.

முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியை விஜிதா ஏற்றினார்.

இந்த நிகழ்வின் பெயர்ப்பலகையை டி.ஆர்.சி நிறுவன நுண்நிதிய அலுவலர் கமலநாதன் திரை நீக்கம் செய்தார். வரவேற்புரையை சேமமடு கிராம மக்கள் சார்பில் அருமைநாயகம் நிகழ்த்தினார்.

தலைமையுரையை தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் சி.திருஞானசம்பந்தமூர்த்தி நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், டி.ஆர்.சி அலுவலர் கமலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ சிப்பாய்க்கு கடூழிய சிறைத்தண்டனை

வவுனியா—

கடையிலிருந்து நகைகளை கொள்ளையடித்துச் சென்ற இராணுவச் சிப்பாய்க்கு நாலரை ஆண்டு கடூழிய சிறைத்தண்டனையை வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வவுனியா நகர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் சிவில் உடையில் சென்ற இராணுவச் சிப்பாய் கைக்குண்டு ஒன்றைக் காட்டி பயமுறுத்தி, 12 தங்கச்சங்கிலி அடங்கிய பெட்டி ஒன்றுடன் தப்பிச் சென்று வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்குள் ஒளிய முற்பட்ட சமயம்- அவரைத் தொடர்ந்த கடை ஊழியர்கள் முகாமுக்குள் அவர் சென்றதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

உரிமையாளர் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இவருக்கு எதிராக கடையில் பணிபுரியும் 3 பேரும், தாண்டிக்குளம் முகாமைச் சேர்ந்த இருவரும், பொலிஸாரும் சாட்சியம் அளித்தனர்.

சிவில் உடையில் வெடிபொருளை வைத்திருந்தமை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை போன்ற குற்றத்துக்காக எதிரியான இராணுவ சிப்பாய்க்கு நாலரை ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மாவட்ட நீதிவான் தீர்ப்பளித்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூன் - 18

1583 - முதன் முதலாக ஆயுள் காப்புறுதி ஒன்று லண்டனில் வில்லியம் கிப்பன்ஸ் என்பவரது பெயரில் செய்து கொள்ளப் பட்டது.

1744 - முதன் முதலாக கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்காக நுழைவுக்கட்டண முறை கொண்டுவரப்பட்டது. இங்கிலாந்து அணிக்கும், கென்ட் அணிக்கும் பின்ஸ்பரி என்ற இடத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போதே இந்தக் கட்டண முறை அறிமுகம் செய்யப்பட்டது.

1812 - அமெரிக்க காங்கிரஸ் பிரிட்டனின் மீது போர்ப்பிரகடனம் செய்தது.

1815 - வரலாற்றுச் சிறப்புப் பெற்ற 'வோர்ட்டலூ' போர் நடந்தது. இந்தப் போரின் போது ஜேர்மனி, ரஷ்யா, பிரிட்டன் படைகளினால் மாவீரன் நெப்போலியனது படைகள் தோற்கடிக்கப்பட்டன.

1858 - இந்திய வரலாற்றில் நிகரற்ற வீராங்கனையும், பிரித்தானியப் படைகளுக்கு எதிராக படை நடத்திப் போரிட்டவருமான ஜான்சி என்ற சிற்றரசின் ராணியான வீராங்கனை லக்ஸ்மிபாய், பிரித்தானியப் படைகளுக் கெதிரான சமர் ஒன்றின் போது களப்பலியாகினர்.

1871 - 'பிளேட்டோவும் சோக்கிரடீசின் மற்ற நண்பர்களும்', 'கிரீஸ் வரலாறு' முதலான நூல்களின் உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஜோர்ஜ் க்ரோட் காலமானார்.

1912 - அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நடந்த குடியரசுக் கட்சி தேசிய மாநாட்டில் அந்தக் கட்சி புல்மூஸ் கட்சி என்றும், ஜனநாயக்கட்சி என்றும் இரண்டாக பிளவுண்டது.

1917 - செஞ்சிலுவைச் சங்க வாரம் முதன் முதலாக அமெரிக்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1918 - ஜேர்மனியின் உயர் இராணுவத்தலைமை 15 வயது முதல் 60 வயது வரையிலான ஆண்கள் அனைவரும் கட்டாய இராணுவப்பணி புரியவேண்டும் என்று கட்டளையிட்டது.

1935 - பிரித்தானியா - ஜேர்மனி உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைப்படி பிரித்தானிய கடற்படையின் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையளவு தான் ஜேர்மனிய கடற்படை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை பிரான்ஸ் நம்பிக்கைத் துரோகம் என வர்ணித்தது. ஏனெனில் இந்தஒப்பந்தத்தைச் செய்ததன் மூலம் ஜேர்மனி- பிரித்தானியாவுக்கும், பிரான்ஸுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தி விட்டது.

1936 - உலகப் புகழ் பெற்ற அன்னை என்ற நாவலின் மூலம் பெரும் புகழ் அடைந்த ரஷ்ய எழுத்தாளர் மார்க்ஸிம் கோர்க்கி காலமானார்.

1940 - பிரிட்டிஷ் விமானங்கள் ஜேர்மனியின் ஹம்பர்க், பிரீமன் ஆகிய நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலைத் தொடங்கின.

\- ஹிட்லரும், முஸோலினியும்மூனிச் நகரில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

1944 - பசுபிக் அரங்கில் பிலிப்பைன்ஸ் கடலில் நடந்த விமான - கடற் போரில் ஜப்பான் மூன்று விமானம் தாங்கிக் கப்பல்களையும், 400 போர் விமானங்களையும் இழந்தது. அமெரிக்கா 120 போர் விமானங்களை இழந்தது.

1954 - அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ உதவியோடு குவாட்டமாலாவில் இராணுவப் புரட்சி மூலம் கேணல் கார்ஸ்டில்லோ ஒர்மோஸ் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1977 - 'கல்லறைக் கவிதைகள்' 'பள்ளிய கனப் பழங்கதை' முதலான பிரபல்யம் பெற்ற நூல்களைப் படைத்த தமிழறிஞரும், கட்டடக் கலை வல்லுநரும் சித்த மருத்துவத்துறை ஆலோசகருமாக விளங்கிய இந்தியர் ஈ.கந்தசாமிப்பிள்ளை காலமானார்.

1979 - அணுவாயுதக் குறைப்புத் தொடர்பான இரண்டாவது உடன்படிக்கை அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டரினாலும், ரஷ்ய ஜனாதிபதி பிரஸ் நோவினாலும் வியன்னாவில் வைத்து கையெழுத்திடப்பட்டது.

1983 - அமெரிக்காவால் சலஞ்சர் எஸ்.டி.எஸ்- 7 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. அமெரிக்காவின் முதல் விண்வெளி வீராங்கனையான கலாநிதி ஸாலிரைட் விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார்.

1985 - விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், அரச படைகளுக்கும் இடையே முதலாவது போர்நிறுத்தம் ஏற்பட்டது.

1992 - முதன் முறையாக அமெரிக்காவும், ரஷ்யாவும் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு முகப்பு ஏவுகணைகளைக் குறைத்துக்கொள்ள ஒத்துக்கொண்டன.

தொகுப்பு - சந்துரு

# 8 லட்சத்து 78 ஆயிரம் ரூபா வவுனியா நகரில் கொள்ளை!

வவுனியா—

வவுனியா தனியார் வங்கிக்கு வைப்பிலிட எடுத்துச்செல்லப்பட்ட 8 லட்சத்து 78 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பசார் வீதியில் உள்ள வியாபார நிலைய உரிமையாளர் உள்வட்ட வீதியிலுள்ள தனியார் வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, கண்டி வீதியிலுள்ள மற்றுமொரு வங்கிக்கு வைப்பிலிடச் சென்றபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பணத்தை பறித்துச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.